## தலைப்பு 306 – இலங்கை புகையிரத திணைக்களம்

---

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை புகையிரத திணைக்களத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் இலங்கை புகையிரத திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2022 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் இலங்கை புகையிரத திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 மே 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இலங்கை புகையிரத திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பின்வரும் பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

| பந்திக்கான தொடர்பு | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| 1.6.3 (அ) | களஞ்சிய முற்பணக் கணக்கின் ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள் திணைக்களத்தின் புத்தகங்களின் பிரகாரம் திறைசேரியின் கணினி அச்சீட்டுப் பிரதியுடன் இணங்காமையால் ரூபா 403,366,221 ஆன அந்த வேறுபாடு மிகை மதிப்பீடாக காண்பிக்கப்பட்டிருந்தது. | மிகை மதிப்பீடு என கணக்குகளில் காண்பிக்கப்பட்டுள்ள மீதியை தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| 1.6.3 (ஆ) | இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களுக்காக கொடுப்பனவு மேற்கொள்ளும் போது ஆவணங்களை சமர்ப்பிப்பதில் ஏற்பட்ட தாமதத்தின் அடிப்படையில் வங்கி வட்டியாக ரூபா 12,584,035 தொகையும், கப்பற் கூட்டுத்தாபனத்திற்கு தாமதக் கட்டணமாக ரூபா 3,520,605 தொகையும், இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு ரூபா 1,412,528 தொகை மற்றும் தனியார் கம்பனியொன்றுக்கு ரூபா 1,000,550 ரொகையும் உள்ளடங்களாக செலுத்தப்பட்ட ரூபா 18,517,718 ஆன தொகை பல்வேறு செயற்திறனின்மைகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட செலவினமாவதுடன், அது இருப்பு பெறுமதிக்கு சேர்க்கப்பட்ட காரணத்தால் வருடாந்த இருப்பு பெறுவனவுகளில் கியரம் அந்த பெறுமதிகளால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | இருப்பின் பெறுமதிக்கு சேர்க்கக்கூடிய செலவினங்களை மாத்திரம் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| 1.6.4 (அ) | திணைக்களத்தின் புத்தகங்களின் பிரகாரம் அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கட்டுப்பாட்டுக் கணக்கின் ஆரம்ப மீதி ரூபா 1,397,662,700 ஆக காணப்பட்டதுடன், அது திறைசேரியின் அச்சீட்டு குறிப்புகளின் பிரகாரம் ரூபா 1,401,840,505 ஆகும். அதன் பிரகாரம், திணைக்களங்களின் புத்தகங்கள் மற்றும் திறைசேரி புத்தகங்களின் பிரகாரம் ரூபா 4,177,805 ஆன வேறுபாடொன்று நிலவியது. 2004 ஆம் ஆண்டு முதல் முன்கொண்டுவரப்படும் இந்த மீதியை இதுவரையிலும் தீர்ப்பனவு செய்ய முடியாதிருந்தது. | வேறுபாட்டுக்கான காரணங்களை ஆராய்ந்து தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| 1.6.4 (ஆ) | அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கட்டுப்பாட்டு மீதி மற்றும் தனிப்பட்ட மீதிகளின் வகைப்படுத்தல் பொழிப்பின் கூட்டுத்தொகை ஆகியவற்றுக்கிடையே ரூபா 1,110,101 ஆன வேறுபாடு தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- |

**1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.6.1 பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுடன் இணங்காமை**

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் பிரகாரம், ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களை தற்போதைய நிலைக்கு உள்ளாக்குதல் வரையான கிரயம் கணக்கு வைக்கப்பட வேண்டியதுடன், 2021 ஆம் ஆண்டின் போது இனங்காணப்பட்டு கணக்கின் ஆரம்ப மீதியாக காண்பிக்கப்பட்டுள்ள ரூபா 72,807 மில்லியனான சொத்துக்களின் கிரயம் நீங்கலாக தற்போதைய நிலைக்கு உள்ளாக்குதல் வரையான அனைத்து செலவினங்களும் உள்ளடக்கப்பட்டிருந்ததாக திருப்தி கொள்ள உரிய தகவல்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் ஆண்டுகளில் கணக்குகளில் காண்பிக்கப்படும் கிரயங்களின் பெறுமதிக்குரிய ஏனைய தகவல்களை கணக்காய்வுக்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் பிரகாரம், உரிய ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கிரயம் சரியாக கணக்கு வைக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2021 ஆம் ஆண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியளவில் இந்நாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ள 120 பயணிகள் பெட்டிகளுக்குரிய உரிய கிரயம் மற்றும் அதற்குரிய துறைமுகக் கட்டணங்கள், சுங்கக் கட்டணங்கள், காப்புறுதிக் கட்டணங்கள், போக்குவரத்துக் கட்டணங்கள் மற்றும் துறைமுகத்திலிருந்து இறங்குதுறைமுகம் வரையான போக்குவரத்துக் கட்டணங்களாக ரூபா 13,000,483,427 ஆன தொகை மீளாய்வாண்டின் போது ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை. | கொள்வனவு செய்யப்பட்ட 120 பயணிகள் பெட்டிகளுக்குனிய கிரயம் இந்திய வெளிநாட்டுக் கடன் ஊடாக பெறப்பட்டிருந்தது. அதற்குரிய கணக்கு வைக்கும் பணிகள் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் ஊடாக மேற்கொள்வதில் நிலவிய தாமதத்தின் அடிப்படையிவ் 2021 ஆம் ஆண்டிற்கு கணக்கு வைக்கப்பட முடியாத காரணத்தால் 2022 ஆம் ஆண்டின் போது கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | சொத்துக்கள் சரியாக கணக்கு வைக்கப்பட வேண்டும். |

### 1.6.2 நிதிக்கூற்றுக்கள் சுற்றறிக்கை ஏற்பாடுகளுடன் இணங்காமை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2021 நவம்பர் 26 ஆந் திகதிய 2021/03 ஆம் இலக்க அரச கணக்குகள் வழிகாட்டிகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டிய அறிக்கையிடல் அடிப்படை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த மாதிரிக்கமைய கணக்குகளில் உள்ளடக்குவதற்கு ஏற்பட்ட தாமதம் காரணமாக தவறொன்று ஏற்பட்டுள்ளதுடன் எதிர்வரும் வருடத்தின் நிதிக்கூற்றுக்களுடன் அதனை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | அரச கணக்குகள் வழிகாட்டியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் சரியாக சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

### 1.6.3 கணக்கீட்டு குறைபாடுகள்

#### (அ) நிதிச் செயலாற்றல் கூற்று

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| (i) நிதிச் செயலாற்றல் கூற்றின் வைப்பு பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகளாக காண்பிக்கப்பட வேண்டியது திறைசேரிக்கமைவான பெறுமதியான போதிலும் திணைக்களத்தின் ஒருங்கிணைந்த பரீட்சை மீதியின் பிரகாரம் வைப்பு பெறுவனவு மற்றும் கொடுப்பனவு பெறுமதிகள் காண்பிக்கப்பட்டிருந்தன. | நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது தாமதத்தின் காரணமாக இது இடம்பெற்றிருந்த துடன் நிதிச் செயலாற்றல் கூற்றின் பிரகாரம் குறித்த பெறுமதி மற்றும் திறைசேரியின் அச்சீட்டு பதிவுகளின் பிரகாரமான வைப்பு பெறுவனவுகள் மற்றும் செலுத்தல்களுக்கு இடையேயான வேறுபாடானது ஒரே பெறுமதியைக் காண்பிப்பதால் நிதிச் செயலாற்றல் கூற்றின் இறுதிப் பெறுபேற்றிற்கு அதனால் மாற்றமொன்று ஏற்படவில்லை. இந்த வழுவானது எதிர்வரும் ஆண்டில் இடம்பெறாதிருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | திறைசேரியின் புத்தகங்களின் பிரகாரம் சரியான பெறுமதி காண்பிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | 2021 நவம்பர் 26 ஆந் திகதிய 2021/03 ஆம் இலக்க அரச கணக்குகள் வழிகாட்டியின் 7.5 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிச் செயலாற்றல் கூற்றின் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக மீதிக்கு மேற்கொள்ளப்பட்ட கட்டுநிதி மீதி சீராக்கம் 2022 சனவரி 12 ஆந் திகதிய SA/MAA/02/01/01 ஆம் இலக்க அரச கணக்குகள் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் நிதிச் செயலாற்றல் கூற்று அறிக்கையிடும் அடிப்படையின் கீழ் நிதிக் கூற்றுக்களின் மாதிரியில் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்கள் கடந்த வருடத்தின் ஒப்பீட்டு பெறுமதிகளை மீள சீராக்கலின் கீழ் குறிப்பொன்றின் மூலம் வெளிப்படுத்த வேண்டிய போதிலும் அவ்வாறு இடம்பெற்றிருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்களின் இந்த சீராக்கங்கள் சரியாக இடம்பெற்றுள்ள போதிலும் தாமதம் காரணமாக அறிக்கையிடும் அடிப்படையில் உள்ளடக்கப்பட்ட மாதிரிக்கமைவான நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. இந்த வழுவானது அடுத்த வருடத்தில் இடம்பெறாதிருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | அரச கணக்குகள் வழிகாட்டலின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**(ஆ) நிதி நிலைமைக்கூற்று**

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | 2021 ஆம் ஆண்டின் நிதிச் செயலாற்றல் கூற்றின் பிரகாரம் மூலதன சொத்துக்களின் சுவீகரிப்புக்கள் ரூபா 23,262,468,064 ஆக காணப்பட்டதுடன் நிதியல்லா சொத்துக்கள் தொடர்பான கூற்றில் (ACA-6) மற்றும் திறைசேரியின் அச்சிடப்பட்ட SA 82 இன் பிரகாரம் கொள்வனவுகளின் பெறுமதி ரூபா 1,371,353,774 ஆகும். வேறுபாடு ரூபா 21,891,114,290 ஆகும். | நிதிச்செயலாற்றல் கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ளது. செலவினத் தலைப்புக்களில் செலவினமாவதுடன் நிதியல்லாத சொத்துக்கள் கூற்றில் சொத்துக்களின் கொள்வனவாக உள்ளடக்கப்பட்டுள்ளது. 2021 நவம்பர் மாதம் முதல் CIGAS நிகழ்ச்சித்திட்டத்தின் சொத்துக்கள் மொடியூலிற்கு இணங்க சொத்துக்களின் கொள்வனவு பெறுமதியாகும். | சொத்துக்களின் கொள்வனவுகள் திறைசேரிக்கு சரியாக அறிக்கையிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | 2022 ஆம் ஆண்டின் ஆரம்பம் முதல் CIGAS சொத்துக்களின் மொடியூலினை நடைமுறைப்படுத்தியிருந்தமையால் 2022 ஆம் ஆண்டில் இந்த வேறுபாடு உருவாகாது என்பது. | |
| (ii) | 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக நிதியல்லாத சொத்துக்களின் பெறுமதி ரூபா 245,322,655,012 ஆன போதிலும் நிதியல்லாத சொத்துக்களின் கூற்றின் ஆரம்ப மீதியாக ரூபா 480,429,150,059 காண்பிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய வேறுபாடானது ரூபா 235,106,495,047 ஆகும்.<br><br>மீளாய்வாண்டின் போது ஆரம்ப மீதி கடந்த வருடத்தின் இறுதி மீதியுடன் ஒப்பிடும் போது வேறுபாடொன்று காணப்படின் அந்த வேறுபாடு தொடர்பில் நிதிக்கூற்றுக்கள் அறிக்கையிடும் அடிப்படையின் கீழ் குறிப்பொன்றின் மூலம் வெளிப்படுத்த வேண்டிய போதிலும் அவ்வாறு வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | CIGAS நிகழ்ச்சித் திட்டத்தின் பிரகாரம் தகவல்களை நாளதுவரையாக்கின்றமையால் இந்த சொத்துக்களின் பெறுமதிகள் நாளதுவரையாக்கப் படுவதால் ஆரம்ப மீதிகளின் பெறுமதி உயர்வடைந்துள்ளது. | மீளாய்வாண்டின் மீதிகளை கடந்த வருடத்தின் மீதிகளுடன் ஒப்பிடும் போது வேறுபாடு காணப்படின் அவை நிதிக்கூற்றுக்களின் குறிப்புக்களின் மூலம் வெளிப்படுத்தப்பட வேண்டும். |
| (iii) | புகையிரதத் திணைக்களத்திற்கு சொந்தமான காணிகள் மற்றும் ஆதனங்கள் இனங்காணப்பட்டு அவற்றின் உரித்தனை உறுதிப்படுத்தி அவற்றின் சரியான பெறுமதியை நிதியல்லா சொத்துக்களின் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்கள் சரியாக கணக்கு வைக்கப்படல் வேண்டும். |

**(இ) வைப்புக் கணக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| புகையிரதத் திணைக்களத்தின் வருமானத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டிய அகற்றப்பட்ட உடைந்த பொருட்களின் விற்பனை செய்யப்பட்டதன் மூலம் கிடைக்கப் பெற்ற ரூபா 60,584,879 ஆன வருமானம் 6000-0-0-002-0-097-0 இலக்கமுடைய வைப்புக் கணக்கின் கீழ் ஒப்பந்த பிணை வைப்புக்களாக பதிவு செய்யப்பட்டிருந்தது. மேலும் இந்த வருமானம் 02 வருடங்கள் முதல் மேற்பட்ட காலமாக வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | வைப்புக் கணக்கின் கீழ் உடைந்த பொருட்களை விற்பனை செய்தமையால் கிடைத்த ரூபா 60,584,879 ஆன வருமானம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததுடன் அது இந்த வருடத்தினுள் குறித்த பணி நிறைவடைந்த பின்னர் வருமானத்திற்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க முடியும் என்பது. | வைப்புக்கள் சரியான முறையில் வகைப்படுத்தப்பட வேண்டும். |

**(ஈ) காசுப்பாய்ச்சல் கூற்று**

இது தொடர்பில் வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகள் பின்வருமாறு.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| காசுப்பாய்ச்சல் கூற்று செலவினங்களுக்குரிய பொறுப்புக்களின் பெறுமதியானது வருமானமல்லாத பெறுவனவுகளாக தவறுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாகிய காசுப்பாய்ச்சலின் பணம் செலவிடலின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ள செலவினங்கள் (ஆளணி வேதனங்கள், மூலதன, ஏனைய மீண்டெழும், உதவு தொகைகள் மற்றும் மாற்றல்கள், ஏனைய செலவினத் தலைப்புக்களுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினங்கள்) மற்றும் முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாகிய காசுப்பாய்ச்சல் கூற்று பணம் செலவிடலின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ள பௌதீக சொத்துக்களின் கொள்வனவு | கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நேர் முறையில் தயாரிக்குமாறு அறிவுரை வழங்கப்பட்டுள்ளமையால் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 02 இன் பிரகாரம் செலவினங்கள் ஒழுங்கமைக்கப்பட்டு முன்வைக்கப்பட்டுள்ளன. | காசுப்பாய்ச்சல் கூற்று செலவினங்கள் சரியாக பதிவு செய்யப்படல் வேண்டும். |

செலவினங்களுக்கு வரவு பெறுமதியுடன் செலவு பெறுமதியானது கழிக்கப்பட்டு தேறிய செலவினம் காண்பிக்கப்பட வேண்டிய போதிலும் செலவினங்களின் வரவு பெறுமதி மாத்திரம் காண்பிக்கப்பட்டிருந்தது.

**(உ) அரச உத்தியோகத்தர்களின் முற்பண “பீ” கணக்கு**

இது தொடர்பில் வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகள் பின்வருமாறு.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | திணைக்களத்தின் புத்தகங்களின் பிரகாரம் கட்டுப்பாட்டு கணக்கின் ஆரம்பமீதி ரூபா 1,269,564,455 ஆக காணப்பட்டதுடன் அது திறைசேரி கணினி அச்சீட்டு பதிவுகளின் பிரகாரம் ரூபா 1,273,742,260 ஆகும்.<br><br>அதற்கமைய, திணைக்களத்தின் புத்தகங்கள் மற்றும் திறைசேரியின் புத்தகங்களுக்கிடையே ரூபா 4,177,805 ஆன வேறுபாடொன்று நிலவியது. 2004 ஆம் ஆண்டு முதல் இதுவரையிலும் சுமார் 17 வருடங்கள் கடந்துள்ள போதிலும் இந்த மீதியை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | திறைசேரியுடன் கலந்துரையாடி எதிர்காலத்தில் தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு உத்தியோகத்தர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | வேறுபாட்டிற்கான காரணங்களை ஆராய்ந்து தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | திணைக்களத்தின் கட்டுப்பாட்டு கணக்கின் மீதி மற்றும் தனிப்பட்ட மீதிகளின் வகைப்படுத்தப்பட்ட பொழிப்பின் கூட்டுத்தொகைக்கு இடையே ரூபா 1,620,898 ஆன வேறுபாட்டினை தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | திணைக்களத்தின் கட்டுப்பாட்டு கணக்கின் மீதி மற்றும் தனிப்பட்ட மீதிகளின் வகைப்படுத்தப்பட்ட போதிலும் கூட்டுத்தொகை ஆகியவற்றுக்கிடையேயான வேறுபாடு ரூபா 1,620,898 ஆக காணப்படுவதுடன் அவற்றுள் ரூபா 903,921 இனங்காணப்பட்டுள்ளதுடன் அதனை தீர்ப்பனவு | வேறுபாட்டிற்கான காரணங்களை ஆராய்ந்து தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் ரூபா 716,977 ஆன மீதியினை உறுதிப்படுத்தி பின்னர் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | |

**(ஊ) களஞ்சிய முற்பணக் கணக்கு**

இது தொடர்பில் வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகள் பின்வருமாறு.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | 2021 புகையிரதத் திணைக்களத்தின் களஞ்சிய முற்பணக் கணக்கினை தயாரிப்பதற்கு பின்பற்றப்படும் கணக்கீட்டு அடிப்படை மற்றும் கொள்கை வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | பதில் வழங்கப்பட்டிருக்க வில்லை. | களஞ்சிய முற்பணக் கணக்கு தயாரிப்பதற்கு பின்பற்றப்பட வேண்டிய கணக்கீட்டு அடிப்படை மற்றும் கொள்கை வெளிப்படுத்தப்பட வேண்டும். |
| (ii) | களஞ்சிய முற்பணக் கணக்கின் ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள் திணைக்களத்தின் புத்தகங்களின் பிரகாரம் மற்றும் திறைசேரியின் கணனி அச்சீட்டின் பிரகாரம் சமமாக இல்லாமை காரணமாக ரூபா 403,366,221 ஆன வேறுபாடு மிகை மதிப்பீடாக காண்பிக்கப்பட்டிருந்தது. | மீதிகள் வேறுபட்டமை தொடர்பில் ஏற்றுக் கொள்கின்றேன். நீண்டகாலமாக நிலவும் இந்த மீதிகளுக்கிடையேயான வேறுபாட்டிற்கு காரணமாக அமைந்துள்ளது. அது தொடர்பில் தகவல்களை கண்டறிவதில் நிலவும் சிரமம் காரணமாக என்பது. | மிகை மதிப்பீடுகளாக கணக்குகளில் காண்பிக்கப்பட்டுள்ள மீதிகளை தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (iii) | இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களுக்காக கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் போது ஆவணங்களை சமர்ப்பிப்பதில் ஏற்படும் தாமதத்தின் காரணமாக வங்கி வட்டியாக ரூபா 15,150,834 தொகையும் கப்பல் கூட்டுத்தாபனத்திற்கு தாமதக் கட்டணமாக ரூபா 1,200,098 தொகையும் இலங்கை துறைமுகங்கள் அதிகார சபைக்கு ரூபா | இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் அடிப்படையில் செலவினம் சேர்க்கப்பட்டமையால் இருப்பு பெறுவனவுகளின் பெறுமதி உயர்வடைகின்றமை ஏற்றுக் கொள்ளப்படுவதுடன் அவ்வாறு மேற்கொள்ளப்பட்டமைக்கு காரணமாக அமைந்துள்ளது அரசு அதற்குரிய கட்டுநிதியை | இருப்பு பெறுமதிக்கு சேர்க்கப்பட வேண்டிய செலவினங்கள் மாத்திரம் சேர்க்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 2,544,785 தொகையும் தனியார் நிறுவனமொன்றிற்கு ரூபா 1,995,755 தொகையும் உள்ளடங்கலாக செலுத்தப்பட்ட ரூபா 20,891,472 ஆன தொகை பல்வேறு செயற்திறனின்மையின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட செலவினமாவதுடன் அவை இருப்பு பெறுமதிக்கு சேர்க்கப்பட்டமையால் வருடாந்த இருப்பு பெறுவனவுகளின் கிரயமானது அந்த அளவிலான அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | வழங்குவதில் ஏற்பட்ட தாமதமாகும். | |
| (iv) | திணைக்களத்தின் செலவினத் தலைப்பின் கீழ் ஒதுக்கப்பட்ட நிதியேற்பாட்டின் மூலம் கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களுக்காக துறைமுகங்கள் அதிகார சபைக்கு செலுத்தப்பட்ட ரூபா 9,079,768 தொகை களஞ்சிய முற்பணக் கணக்கில் ஆண்டினுள்ளான கொடுப்பனவுகள் (வரவு வைத்தல்கள்) ஆக காண்பிக்கப்பட்டமையின் அடிப்படையில் ஆண்டினுள் வரவு வைத்தல்கள் அந்த அளவினால் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | ஏற்றுக் கொள்கின்றேன். துறைமுகங்கள் அதிகார சபைக்கு ஆண்டின் ஆரம்ப காலப்பகுதியில் களஞ்சிய முற்பணக் கணக்கில் வழங்கப்பட்ட முற்பணத் தொகையின் மூலம் அனைத்து செலவினங்களும் மேற்கொள்ளப்பட்ட மையால் அந்த செலவினத் தலைப்பின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களின் துறைமுகக் கட்டணங்களும் அந்த முற்பணத் தொகையிலிந்தே செலுத்தப்பட்டுள்ளன. அவை எதிர்வரும் வருடங்களில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | குறித்த கொடுப்பனவுகள் மாத்திரம் ஆண்டினுள் வரவு தைத்தல்களினுள் உள்ளடக்கப்பட வேண்டியமை. |

(எ) அதிகாரமற்ற செயற்பாட்டு நட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| களஞ்சிய முற்பணக் கணக்கின் ரூபா 13 மில்லியனான செயற்பாட்டு நட்டம் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் இதுவரையிலும் தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்பட்டிருக்க வில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் குறித்த செயற்பாட்டு நட்டத்தினை தீர்ப்பனவு செய்வதற்கு திறைசேரி நிதியேற்பாட்டினை ஒதுக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 1.6.4 கணக்காய்வு சான்றுகளின்மை

பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பிலான கணக்காய்வு சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான களஞ்சிய முற்பணக் கணக்கில் சமர்ப்பிக்கப்பட்டிருந்த ரூபா 268,627,824 தொகையான 05 கணக்கு விடயங்களுக்குரிய காலப்பகுப்பாய்வு மற்றும் உருவாகிய விதம் காண்பிக்கப்படும் பட்டோலைகள் முன்வைக்கப்படாமையால் அவற்றை திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது. | களஞ்சிய முற்பணக் கணக்கின் கீழ் 5 விடயங்களுக்குரிய காலப்பகுப்பாய்வுகள் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | கணக்கு மீதிகளை சான்றுப்படுத்து வதற்குரிய எழுத்துமூல சான்றுகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 வருமான முகாமைத்துவம்

வருமானம் சேகரித்தல், நிலுவை வருமானத்தை சேகரித்தல் தொடர்பில் வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்பகள் பின்வருமாறு.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) வருமானம்** | | |
| ரூபா 2,678,724,988 தொகையான மீளாய்வாண்டின் வருமானம் ரூபா 4,566,646,432 தொகையான 2020 ஆம் ஆண்டிற்கான வருமானத்தை விட 41 சதவீதத்தினாலும் ரூபா 7,901,325,666 தொகையான 2019 ஆம் ஆண்டிற்கான வருமானத்திற்கு ஒப்பாக 66 சதவீதத்தினாலும் குறைவடைந்திருந்தது. | கடந்த 02 வருடங்களில் நிலவிய கொவிட்-19 தொற்று நோய் நிலைமையினுள் போக்குவரத்து கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டமை, மட்டுப்படுத்தப்பட்ட பதவியணி சேவைக்கு அழைக்கப்பட்டமை மற்றும் தனிமைப்படுத்தல் சட்டம் போன்றவற்றால் வருமானம் வீழ்ச்சியடைந்துள்ளமை. | வருமானம் குறைவடைந்தமைக் கான காரணங்களை ஆராய்ந்து வருமானத்தை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| **(ஆ) நிலுவை வருமானம்** | | |
| (i) 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான நிலுவை வருமான மீதி ரூபா 1,540,268,161 ஆன போதிலும் 2021 ஆம் ஆண்டின் நிலுவை வருமான கூற்றின் (ACA(i) மாதிரி) ஆரம்ப மீதியானது ரூபா 1,545,156,073 ஆக காண்பிக்கப்பட்டிருந்த மையால் ரூபா 4,887,912 ஆன வேறுபாடொன்று வெளிப்படுத்தப்பட்டது. மீளாய்வாண்டின் ஆரம்ப மீதி கடந்த வருடத்தின் இறுதி மீதியுடன் ஒப்பிடும் போது வேறுபாடொன்று காணப்படின் அது தொடர்பில் நிதிக்கூற்றுக்களில் அறிக்கையிடும் அடிப்படையின் கீழ் குறிப்பொன்றின் மூலம் வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு இடம்பெற்றிருக்கவில்லை. | பிரதி பொது முகாமையாளர் (வாணிப) இனால் சான்றுப்படுத்தப்பட்டுள்ள நிலுவை வருமான அறிக்கையின் பிரகாரம் படி கூலி மற்றும் இலத்திரனியல் திறை ஆகியவற்றிற்காக 2018.12.31 ஆந் திகதி வரையிலும் நிலுவை மீதிகள் காணப்படுகின்றமை. | நிலுவை வருமானத்தை சரியாக கணக்கு வைக்க வேண்டியதுடன் கடந்த வருடங்களுடன் ஒப்பிடும் போது மீதிகளுக்கிடையே வேறுபாடு காணப்படின் அது தொடர்பில் குறிப்பொன்றின் மூலம் வெளிப்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான நிலுவை பண்ட களஞ்சிய வருமானத்தினுள் உள்ளடக்கப்பட்டிருந்த பாணந்துறை களஞ்சியத்திற்குரிய நிலுவை குத்தகை வாடகை ரூபா 351,975 ஆன போதிலும் நிதிக் கூற்றுக்களில் அது ரூபா 181,200 ஆக காண்பிக்கப்பட்டமையால் நிலுவை வருமானம் ரூபா 170,775 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | நிலுவை வருமானம் தொடர்பான அறிக்கைகளை தயாரிக்கும் போது தரவு பிரதி எடுக்கும் போது ஏற்பட்ட வழுக்கள் காரணமாக இந்த பெறுமதி கைவிடப்பட்டுள்ளது. எவ்வாறான போதிலும் இந்த நிலுவையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கும் போது மொத்த நிலுவை தொகையான ரூபா 351,975 ஆன தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை. | நிலுவை குத்தகை வாடகை சரியாக கணக்கு வைக்கப்படல் வேண்டும். |
| (iii) | 01 ஆம் இலக்க அனுமதிப் பத்திர கணக்கின் கீழ் உள்ள ரூபா 769,194 ஆன தொகை 1985 ஆம் ஆண்டு முதல் முன்கொண்டு வரப்படும் மீதியாவதுடன் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படடிருக்கவில்லை. | 01 ஆம் இலக்க அனுமதிப் பத்திர கணக்கின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ள ரூபா 769,194 ஆன பெறுமதி உருவாகியுள்ள விதம் தொடர்பிலான தகவல்களை கண்டறிய முடியாத காரணத்தினால் பதிவழிப்பதற்காக கோரிக்கை விடுக்க முடியாதுள்ளதுடன் முன்பிருந்தே குறித்த பெறுமதி மாத்திரம் புத்தகங்களில் காண்பிக்கப்பட்டுள்ள மையும் தகவல்களை கண்டறிவதற்கு உதவக் கூடிய விடயத்திற்கு பொறுப்பான உத்தியோகத்தர்கள் இல்லாதுள்ளமையின் அடிப்படையிலும் தீர்ப்பனவு செய்ய முடியாதுள்ளமை. | பழைய நிலுவை வருமான மீதிகளை துரிதமாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (iv) | 02 ஆம் இலக்க அனுமதிப் பத்திர கணக்கின் 2018 ஆம் ஆண்டிற்கான நிலுவை அனுமதிப்பத்திர வருமானத்தை விட 372 சதவீதத்தினால் 2019 ஆம் ஆண்டிற்கான நிலுவை அனுமதிப்பத்திர வருமானம் அதிகரித்திருந்ததுடன் 2020 | 2019 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் 2018 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 5.366 மில்லியன் நிலவியதுடன் 2020.12.31 ஆந் திகதி வரையிலும் அது ரூபா 1.885 மில்லியன் வரையிலும் 2019 ஆம் | நிலுவை வருமான மீதிகள் அதிகரிப்பதற்கான காரணங்களை கண்டறிந்து துரிதமாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க |

| | | | |
|---|---|---|---|
| | ஆம் ஆண்டின் போது அது 1,210 சதவீதம் வரை அதிகரித்திருந்தது. | ஆண்டிற்குரிய ரூபா 297,562 மில்லியனாக நிலவிய நிலுவை வருமானப் பெறுமதியானது 2020.12.31 ஆந் திகதியளவில் ரூபா 8.99 மில்லியன் வரையிலும் குறைத்துக் கொள்வதற்கு இயலுமானதாக இருந்த போதிலும் நிலவிய Covid-19 தொற்றுநோய் நிலைமை காரணமாக குறித்த நிலுவைப் பெறுமதி தொடர்ந்தும் அறவிடுவதில் சிரமமாக உள்ளமை. | வேண்டும். |
| (v) | மட்டக்களப்பு புகையிரதத் திணைக்களத்திற்குரிய கணக்குகளை பரீட்சிக்கும் போது 2013 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரையிலும் 03 சந்தர்ப்பங்களில் ரூபா 1,056,668 ஆன தொகை புகையிதத் தணைக்களத்திற்கு பெற்றுக் கொள்ள வேண்டிய மீதியாக காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் இதுவரையிலும் அந்த மீதியை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்பட்டிருக்க வில்லை. | நிலுவை வருமான மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (vi) | 1987 ஆம் ஆண்டிற்கு முன்பிருந்து 197 அரச நிறுவனங்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 7,378,328 தொகை மற்றும் 1990-2020 இற்கு இடைப்பட்ட காலத்தினுள் அரசின் 187 நிறுவனங்களிலிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 1,766,387 தொகையுமாக ரூபா 9,144,715 ஆன நிலுவை அனுமதிப்பத்திர மீதியை அவதானிக்கப்பட்டதுடன் அவற்றின் அறவீடுகள் தொடர்பில் கணக்காய்வில் திருப்தி கொள்ள முடியாதிருந்தது. | மாதாந்த பயணிகள் வருமானத்தினை கணிப்பிடும் போது வருமானத்திற்கு சேர்ப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் இடம்பெறுவதால் ஒவ்வொரு மாதத்திலும் வேறுபாடு காணப்படுகின்றது. அது எதிர்வரும் கணிப்பீடுகளின் போது உரிய முறையில் சமப்படுத்தப்பட்டு முன்கொண்டு செல்லப்படுகின்றமை. | பழைய கடன் மீதியை துரிதமாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (vii) | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான நிலுவை பயணிகள் | அந்த புகையிரத நிலைய அதிபர்களுக்குரிய மீதிகளை எதிர்காலத்தில் அறவிடுவதற்கு | வேறுபாட்டிற்கான காரணங்களை ஆராய்ந்து தீர்ப்பனவு செய்வதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | வருமானமாக ரூபா 12,755,632 ஆன நிலுவை மீதியொன்று காணப்பிக்கப்பட்ட போதிலும் புகையிரத நிலையங்களில் தனிப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 12,268,412 ஆனமையால் நிலுவை பயணிகள் வருமானத்தில் ரூபா 487,220 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | நடவடிக்கை எடுப்பதாக குறித்த பிரிவுகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (viii) | 07 புகையிரத நிலையங்களில் சேவையாற்றி சேவையிலிருந்து ஓய்வுபெற்றுச் சென்றுள்ள புகையிரத நிலைய அதிபர்களினால் தீர்ப்பனவு செய்யப்படாத நிலுவை பயணிகள் வருமானம் ரூபா 87,100 ஆகும். | சமப்படுத்துவதில் ஏற்பட்ட தாமதமானது எதிர்காலத்தில் தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | தீர்ப்பனவு செய்யப்படாத நிலுவை வருமானம் தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ix) | சில புகையிரத நிலையங்கள் மற்றும் உப புகையிரத நிலையங்களின் ஊடாக தீர்ப்பதற்குள்ள நிலுவைப் பணம் அந்த புகையிரத நிலையங்களின் மூலம் தீர்க்கப்பட்டுள்ள போதிலும் பிரதான நிதிப் பிரிவின் மூலம் அதற்குரிய தனித்தனியான செலவுப் பட்டியல்கள் விநியோகிக்கப்படாத காரணத்தினால் தொடர்ந்தும் அந்த புகையிரத நிலையங்களில் நிலுவை மீதிகளாக ரூபா 511,217 கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது. | Covid-19 தொற்றுநோய் நிலைமையின் அடிப்படையில் அலுவலகப் பணிகள் பொதுவான முறையில் இடம்பெறாமை மற்றும் பதவியணியை வரவழைப்பதில் கட்டுப்பாடு நிலவியமையால் தாமதம் ஏற்பட்டமையை ஏற்றுக் கொள்கின்றேன். எதிர்காலத்தில் தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | நிலுவை மீதிகளை தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (x) | 09 புகையிரத வீதிகளின் 04 புகையிரத நிலையங்களின் பொதுக் கணக்குகள் இறுதியாக தயாரிக்கப்பட்டிருந்தது 66 புகையிரத நிலையங்களில் என்பதுடன் அது 2019 ஆம் ஆண்டின் திசெம்பர் மாதம் வரை ஆகும். ஏனைய 05 வீதிகளின் 70 புகையிரத நிலையங்களின் பொதுக் கணக்குகள் 2020 ஆம் ஆண்டின் சனவரி மாதம் மட்டுமே தயாரிக்கப்பட்டிருந்தன. இது | பதில் வழங்கப்பட்டிருக்க வில்லை. | புகையிரத நிலையங்களின் பொதுக் கணக்குகளை ஒப்பிடுதல் தாமதமின்றி தயாரிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சதவீமமாக 37 சதவீதம் வரையிலான குறைவான பெறுமதி என்பது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | | |
| (xi) | புகையிரத பயணிகளின் பண்டப் போக்குவரத்திற்காக மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் 31 நிறுவனங்களிலிருந்து ரூபா 120,476,948 ஆன தொகை நிலுவையாக காணப்பட்டதுடன் 16 நிறுவனங்களிலிருந்து பெற வேண்டிய ரூபா 20,307,403 ஆன நிலுவைத் தொகை 21 வருடங்களுக்கு பழைய மீதியாக காணப்பட்டது. | செயற்பாடற்றுக் காணப்படும் மற்றும் மூடப்பட்டுள்ள நிறுவனங்கள் காரணமாக அந்த நிறுவனங்களுக்கு அனுப்பப்பட்டுள்ள கடிதங்களை மீண்டும் திருப்பி அனுப்பியுள்ளதுடன் அதனை பரீட்சித்து இந்த பெறுமதிகளை எதிர்காலத்தில் பதிவழிப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | நிலுவை வருமானங்களை அறவிடுவதற்கு துரித நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| • | 2017 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரையிலும் அறவிட வேண்டிய நிலுவை வியாபார பட்டியல்களின் பெறுமதியான ரூபா 1,696,225 தொகை 2021 ஆம் ஆண்டின் போதும் அறவிடப்பட்டிருக்கவில்லை | நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு உரிய நிறுவனங்களுக்கு அவ்வப்போது கடிதங்கள் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளமை. | - மேற்படி - |
| (xii) | காணிகளை குத்தகைக்கு வழங்கியதன் மூலம் பெற வேண்டிய நிலுவை வருமானத்தை கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | பதில் வழங்கப்பட்டிருக்க வில்லை. | காணிகளின் நிலுவைக் குத்தகை வருமானத்தை கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (xiii) | மாவட்ட பொறியியலாளர் - மத்திய (வடக்கு) அலுவலகத்திற்குரிய 158 புகையிரத பாதுகாக்கப்பட்ட வளங்களுக்குரிய 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான ரூபா 50,000 இற்கு மேலான நிலுவை வருமானங்களின் பெறுமதி ரூபா 53,708,793 ஆகும். | பதில் வழங்கப்பட்டிருக்க வில்லை. | நிலுவை வருமானத்தை துரிதமாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| (xiv) பொல்காவல புகையிரத நிலையத்தில் உள்ள சிற்றுண்டிச்சாலைகள் இரண்டு, கண்டி புகையிரத நிலையத்தின் மேல்தளத்தில் அமைந்துள்ள சிற்றுண்டிச்சாலை மற்றும் அனுராதபுரம் புகையிரத நிலையத்தின் சிற்றுண்டிச்சாலை ஆகியவற்றின் குத்தகை காலம் முறையே 2020 ஏப்ரல் 04, 2021 யூலை 02 மற்றும் 2021 நவம்பர் 30 ஆந் திகதிகளில் நிறைவடைந்திருந்தது. அதன் பிரகாரம் மேற்படி குத்தகை உடன்படிக்கையின் பிரகாரம் குறித்த குத்தகையாளரினால் செலுத்த வேண்டிய குத்தகைப் பணம், நிலுவை மின்சார கட்டணங்கள், நிலுவை நீர்ப்பட்டியல்கள் மற்றும் வழங்கிய குத்தகை சலுகைகள் ஆக செலுத்த வேண்டிய ரூபா 1,338,946 ஆன தொகை 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்பட்டிருக்க வில்லை. | சிற்றுண்டிச்சாலையை குத்தகைக்கு வழங்கியதன் மூலம் அறவிடப்பட வேண்டிய குத்தகை, மின்சாரம், நீர்க் கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**2.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உடன்படல்**

இது தொடர்பில் வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகள் பின்வருமாறு.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2021 நவம்பர் 26 ஆந் திகதிய 2021/03 ஆம் இலக்க அரச கணக்குகள் வழிகாட்டியின் 3.3 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களின் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான அனைத்து கடப்பாடுகளும் இலக்கங்களின் அடிப்படையில் வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும் திணைக்களத்தின் 05 உப திணைக்களங்களுக்குரிய ரூபா 196,113,306 பெறுமதியான கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் கணக்குகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | இந்த திணைக்களத்தின் பெறுகை நடைமுறை ஆண்டின் இறுதியில் நிறைவடையாத தொடர்ச்சியான கொள்வனவு செயன்முறையாகும். அனைத்து கொள்வனவுகளும் ஒரு வருடத்திற்கு நிலவும் நிதியேற்பாடுகளுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட முடியாமையினால் பொறுப்புக்களை திட்டவட்டமாக இனங்கண்டு நிதியேற்பாடுகளுடன் ஒப்பிட்டு சமர்ப்பிப்பதில் சிக்கல் நிலைமை காணப்படுகின்றமையும் | அரசின் நிதிச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | எதிர்வரும் வருடங்களில் தனித்தனியாக நிதியேற்பாடுகளுக்கு மாத்திரம் கடப்பாடுகள் ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றமை. | |
| (ஆ) | ஒவ்வொரு உப திணைக்களத்தினதும் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட பொறுப்புக்கள் திறைசேரியின் SA 92 இலக்கமுடைய திரண்ட பொறுப்புக்கள் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதிக்கு சமமாக வேண்டிய போதிலும் அந்த மீதிகளுக்கிடையே ரூபா 109,309,483 ஆன வேறுபாடு நிலவியது. | - மேற்படி - | திறைசேரியின் திரண்ட பொறுப்புக்கள் கூற்றில் காணப்படும் பொறுப்புக்கள் நிதிக் கூற்றுக்களில் பொறுப்புக்கள் தொடர்பான கூற்றில் காண்பிக்கப்படல் வேண்டும். |
| (இ) | திறைசேரியின் SA 92 ஆம் இலக்க திரண்ட பொறுப்புக்கள் அறிக்கையின் மீதிகள் மற்றும் கைத்தொழில் உப திணைக்களத்தின் பொறுப்புக்களாக காண்பிக்கப்பட்டுள்ள ரூபா 34,557,584 ஆன மீதியினை உறுதிப்படுத்துவதற்கு பொறுப்புக்கள் பதிவேடு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | - மேற்படி - | பொறுப்புக்கள் மீதியினை சான்றுப்படுத்துவதற்கு குறித்த பொறுப்புக்கள் பதிவேடு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | இரத்மலானை பிரதான இயந்திர பொறியியல் அலுவலகத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள் மீதி ரூபா 153,606,002 ஆன போதிலும் அந்த அலுவலகத்தின் பொறுப்புக்களாக திறைசேரியின் SA 92 கூற்றில் உள்ளடக்கப்பட்டிருந்த மீதி | - மேற்படி - | சரியான பொறுப்பு மீதிகள் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| ரூபா 94,786,684 ஆகும். அதற்கமைய, ரூபா 58,819,318 பெறுமதியான மீதிகள் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. | | |
| (உ) நிதிப்பிரமாணம் 94(1) பிரகாரம் (வழங்கல் மற்றும் சேவை அல்லாத) நிதியேற்பாட்டை விஞ்சி பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட கூடாத போதிலும் மீளாய்வாண்டின் இறுதியில் மேற்கொள்ளப்பட்ட மாதிரி பரிசோதனையில் 03 செலவின விடயங்களுக்குரிய நிதியேற்பாட்டினை விஞ்சி ரூபா 193,276,303 ஆன பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. | - மேற்படி - | நிதிப்பிரமாணம் 94(1) பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2.3 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டின் பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சுற்றுலா அமைச்சினால் (159 ஆவது செலவினத் தலைப்பு) பண்டாரவளை புகையிரத நிலையத்தினை அபிவிருத்தி செய்வதற்காக 2021 ஆம் ஆண்டிற்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 12,395,900 ஆன நிதியேற்பாட்டில் 48 சதவீதம் அல்லது ரூபா 5,490,802 மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. | நிலவிய கொவிட் 19 தொற்றுநோய் நிலைமை காரணமாக குறித்த பெறுகை நடவடிக்கைகள் உரிய காலத்தில் மேற்கொள்ள முடியாமையால் இந்த நிதியேற்பாடு எஞ்சியுள்ளது. | ஏனைய அமைச்சு மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்ட நிதியேற்பாடுகளுக் குரிய செயற்திட்டங்களுக்கு பயன்படுத்தப்பட்டு புகையிரத நிலையங்கள் நவீனமயப்படுத்தப்பட வேண்டும். |

## 2.4 முற்பணங்களை வழங்குதல் மற்றும் தீர்ப்பனவு செய்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 08-11(இ) பந்தியின் பிரகாரம் இடைக்கட்டுநிதி ஒன்றினை வழங்கியதன் பின்னர் குறித்த பணி நிறைவு செய்யப்பட்டு 10 நாட்களினுள் அந்த உப கட்டுநிதி மீண்டும் தீர்க்கப்பட வேண்டிய போதிலும் ரூபா 1,899,000 கட்டுநிதிகள் தொடர்பில் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் அறிவுரைகளுக்கமைய உபகட்டுநிதியானது 10 நாட்களுக்கு தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்பதும் அதற்கமைய கட்டுநிதியை மீள தீர்ப்பனவு செய்யும் போது தாமதம் ஏற்படுத்தும் உத்தியோகத்தர்களுக்கு மீண்டும் கட்டுநிதி வழங்காதிருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றமையும் அனைத்து திணைக்களங்களினதும் தலைவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளமை. | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு அமைய உப கட்டுநிதி உரிய காலங்களினுள் தீர்ப்பனவு செய்யப்படல் வேண்டும். |

## 2.5 வங்கிக் கணக்குகளை நடைமுறைப்படுத்தல்

வங்கிக் கணக்குகளை நடைமுறைப்படுத்தல் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட குறைபாடுகள் பின்வருமாறு.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) கணக்கு இலக்கம் 176-1-001-290727-313 உரிய ரூபா 197,918 தொகையான 06 காசோலைகள் மதிப்பிழந்திருந்த போதிலும் அது தொடர்பில் நிதிப்பிரமாணம் 189 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 06 மதிப்பிழந்த காசோலைகள் தொடர்பில் குறித்த நிறுவனங்களுக்கு அறிவித்துள்ளதுடன் தகவல் கிடைத்த பின்னர் தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) கணக்கு இலக்கம் 176-1-001-2-9027313 இற்குரிய 2021 ஆம் ஆண்டின் நவம்பர் மற்றும் திசெம்பர் மாதங்களுக்குரிய | ரூபா 508,324 தொகையான 19 வைப்புக்களை இனங்கண்டு கணக்கு வைக்க நடவடிக்கை | நேரடி வைப்புக்களை இனங்கண்டு தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க |

| | | | |
|---|---|---|---|
| | இனங்காணப்படாத 19 நேரடி வைப்புக்களின் பெறுமதி ரூபா 508,324 ஆக காணப்பட்டதுடன் அவற்றை இனங்கண்டு தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எடுக்கப்பட்டுள்ளமை. | வேண்டும். |

## 2.6 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்படுகின்றது.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | அவதானிப்புக்கள்<br>இணங்காமைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை** | | | |
| i. VIII ஆம் அத்தியாயத்தின் 3.2 ஆம் பந்தி | பொதுவான நடவடிக்கைகளிலிருந்து விலகிய பொதுவான அலுவலக நேரத்தினுள் நிறைவேற்றமுடியாத பணிகளுக்கு மாத்திரம் மேலதிக படிகள் செலுத்த வேண்டிய போதிலும் பொதுவான கடமைகளுக்குரிய மேலதிக நேரப் படிகள் செலுத்தப்பட்டிருந்தன. | பதில் வழங்கப்பட்டிருக்க வில்லை. | தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகளுக் கமைய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| ii. VIII ஆம் அத்தியாயத்தின் 3.6 ஆம் பந்தி | உத்தியோகத்தர் ஒருவரின் பதவி வெற்றிடமாகிய போது மாத்திரம் அந்த பதவியின் கடமையை மேவுகை செய்வதற்காக மேலதிக நேரப் படிகள் அங்கீகரிக்கப்படாத கூடாத போதிலும் ஒழுக்கப் பிரிவின் மற்றும் சட்டப் பிரிவின் வெற்றிடங்களுக்காக மேலதிக நேரப் படிகள் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. | பதில் வழங்கப்பட்டிருக்க வில்லை. | தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகளுக் கமைய மேலதிக நேரப் படிகள் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| **(ஆ) அரச நிதிச் சுற்றறிக்கை**<br>2015 யூலை 10 ஆந் திகதிய 02/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 12 ஆம் பந்தி | (i) கைத்தவிர்ப்பு நடவடிக்கை சுற்றறிக்கை வெளியிடப்பட்ட திகதியிலிருந்து மூன்று மாதங்களினுள் நிறைவு செய்யப்பட வேண்டிய போதிலும் அப்புறப்படுத்தப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்டுள்ள திணைக்களத்திற்குரிய 20 வாகனங்கள் மற்றும் கழிவுகளாக அகற்றப்பட்டுள்ள வாகனங்களின் 33 உதிரிப்பாகங்களை ஏலத்தில் விடுவதற்காக 2020 மார்ச் 03 மற்றும் 2020 ஆகஸ்ட் 13 ஆந் திகதிய கடிதங்களில் பிரதி பொது முகாமையாளர் பெறுகைக்கு அறிவித்துள்ள போதிலும் அந்த பணிகள் இதுவரையிலும் இடம்பெற்றிருக்கவில்லை. | இதற்காக 2022.05.18 ஆந் திகதிய தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு நியமிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய எதிர்வரும் பணிகள் இடம்பெற்றவாறு உள்ளன. | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| | (ii) 2015 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு வருடமும் வாகன கைத்தவிர்ப்பு நடைமுறை மேற்கொண்டு அது தொடர்பில் தகவல்கள் உரிய ஆண்டின் யூன் 30 ஆந் திகதிக்கு முன்னர் உரிய மாதிரிகளின் பிரகாரம் அரச நிதி பணிப்பாளர் நாயகம், திறைசேரி செயற்பாட்டு பணிப்பாளர் நாயகம், தேசிய வரவு செலவுத் திட்ட பணிப்பாளர் நாயகம், கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | பதில் வழங்கப்பட்டிருக்க வில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சின் செயலாளரின் 2018 பெப்ரவரி 26 ஆந் திகதிய எம்டீ/02/02/01/01/12 ஆம் இலக்க புகையிரத பாதுகாக்கப்பட்ட இடங்கள் தொடர்பிலான தாபன நிர்வாக நடைமுறை திருத்த கடிதத்தின் 02 ஆம் பந்தி | (i) குத்தகை ஆவணங்களை நாளதுவரையாக்க வேண்டிய போதிலும் அவ்வாறு இடம்பெற்றிருக்கவில்லை<br>(ii) ஒவ்வொரு 05 வருடத்திற்கும் ஒரு தடவை விலைமதிப்பீட்டுத் திணைக்களத்தின் அறிக்கையினை பெற்றுக் கொள்ள வேண்டிய போதிலும் அவ்வாறு பெற்றுக் கொண்டிராத 21 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. | பதில் வழங்கப்பட வில்லை. | போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சின் செயலாளரின் பாதுகாப்பரண்கள் தொடர்பான தாபன நிர்வாக நடைமுறை திருத்த கடிதத்தின் பந்திக்கமை நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | 2018 மார்ச் 19 ஆந் திகதிய 01/2018 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் அ, ஆ, இ பந்திகள் | ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட முடியாத நிலையிலுள்ள அனைத்து வாகனங்களும் 2018 யூன் 30 ஆந் திகதிக்கு முன்னர் கைதவிர்க்கப்பட்டு அந்த கைதவிர்ப்பிலிருந்து கிடைக்கும் பணம் திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டு கைதவிர்ப்பு நடைமுறை நிறைவு செய்யப்பட்ட பின்னர் குறித்த நாளதுவரையாக்கப்பட்ட தகவல்கள் 2018 யூன் 30 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கொம்ரேலர் நாயகம் அலுவலகத்திற்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு இடம்பெற்றிருக்க வில்லை. | பதில் வழங்கப்பட வில்லை. | சொத்துக்கள் முகாமைத்துவம் சுற்றறிக்கையின் குறித்த பந்திக்கமைய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2.7 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

---------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | (i) | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 5.4.4 இன் பிரகாரம் தொழில் ஆரம்பிப்பு முற்பணம் (Mobilization Advance) செலுத்தும் போது ஒப்பந்த தொகையில் தற்காலிக தொகை (Pro sum) மற்றும் அவசர நிகழத்தக்க நிதியம் (Condingencies) இற்காக ஒதுக்கப்பட்டுள்ள பெறுமதி குறைக்கப்பட்டு தொழில் ஆரம்பிப்பு முற்பணம் (Mobilization Advance) கணிப்பிடப்பட வேண்டிய போதிலும் 319/03/2021 மற்றும் 2021 மார்ச் 17 ஆந் திகதிய கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் மூலம் மொத்த ஒப்பந்த தொகையின் 20 சதவீதமான ரூபா 4,332,023 தொகை தொழில் ஆரம்பிப்பு முற்பணமாக (Mobilization Advance) செலுத்தப்பட்டிருந்தது. இதற்கமைய செலுத்த வேண்டிய தொகையை விட தொழில் ஆரம்பிப்பு முற்பணமாக (Mobilization Advance) ரூபா 528,285 தொகையும் அதற்குரிய வற் (VAT) வரித் தொகையான ரூபா 42,263 என ரூபா 570,548 அலாவ புகையிரத நிலையத்தை நிர்மாணிக்கும் போது ஒப்பந்தக்காரருக்கு கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது. | மிகைக் கொடுப்பனவு இடம்பெற்றிருப்பின் சமர்ப்பிக்கப்படும் பட்டியலிருந்து அறவிடப்படும் என்பதும் எதிர்கால பெறுகை நிபந்தனைகளை தயாரிக்கும் போது குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதும் | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளுக்கு அமைய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | மீளளிப்புக் கடிதத்தின் நிபந்தனைகளின் பிரகாரம் விலைக்கேள்வி கையேற்கப்பட்டு 180 நாட்களினுள் ஒப்பந்தம் நிறைவு செய்யப்பட வேண்டிய போதிலும் கணக்காய்வுத் திகதியான 2022 சனவரி 18 ஆந் திகதி வரையிலும் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு 375 நாட்கள் கடந்திருந்த போதிலும் அலவ்வ புகையிரத நிலையத்தின் நிர்மாணிப்பு ஒப்பந்தம் நிறைவு செய்யப்பட்டிருக்க வில்லை. | 2020 மார்ச் மாதம் முதல் கொவிட் தொற்று நோய் நிலைமை காரணமாக நாடு முடக்கப்பட்டு இருந்தமை மற்றும் பதவியணியை வரவழைப்பது மட்டுப்படுத்தப்பட்ட மையால் இந்த தாமதம் ஏற்பட்டுள்ளது. | குறித்த பிரதிநித்துவ கடிதத்தின் நிபந்தனைகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (ஆ) | மட்டக்களப்பு புகையிரத பாதையில் மேற்கொள்ளப்பட்ட அவசர பரிசோதனையொன்றின் காரணமாக அதில் சேவையில் ஈடுபட்டிருந்த கண்காணிப்பு முகாமையாளர் பணி நீக்கத்திற்கு உள்ளாக்கப்பட்டு 2009 யூன் 01 ஆந் திகதி முதல் கொழும்பிற்கு இடமாற்றம் செய்யப்பட்டிருந்ததுடன் அந்த அறிக்கையில் தயாரிக்கப்பட்ட 2022 மே 04 ஆந் திகதி வரையிலும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் II தொகுதியின் XLVIII அத்தியாயத்தின் 14 ஆம் பிரிவின் பிரகாரம் உரிய முறையில் குற்றப்பத்திரிகை வழங்கப்பட்டிராமையும் இந்த சம்பவத்தின் அடிப்படையில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள மேலதிக செலவினச் சுமையொன்று திணைக்களத்திற்கு ஏற்பட்டுள்ளமையும் அவதானிக்கப்பட்டுள்ளது. | பதில் வழங்கப்படவில்லை. | பணிநீக்கத்திற்கு உரிய தாபன விதிக் கோவையின் பிரிவுகளின் பிரகாரம் தாமதமின்றி நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (i) | இந்த வெற்றிடமான பதவி கடமைகளை மேவுகை செய்வதற்காக ஓய்வு பெற்ற ஓடுபாதை கண்காணிப்பு உத்தியோகத்தர்கள் மூவர் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் 2019, 2020, 2021 ஆம் ஆண்டுகளில் மாகாணங்களுக் கிடையிலான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டு புகையிரத பயணங்கள் மட்டுப்படுத்தப்பட்டுள்ள போதிலும் அவர்களுக்கு பிரயாண செலவினம், கூட்டிணைந்த படிகள் மற்றும் மேலதிக நேரப் படிகளாக (2019 முதல் 2021 வரை) ரூபா 8,695,950 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்தது. | பதில் வழங்கப்பட்டிருக்க வில்லை. | வெற்றிடமான பதவிகளுக்காக ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | 2021 ஆம் ஆண்டின் போது நாடு முழுவதும் ஏனைய புகையிரத நிலைய சேவை நிலையங்களின் சேவைக்காலம் முற்பகல் 8.30 முதல் பிற்பகல் 4.15 வரை மட்டுப்படுத்தப்பட்டுள்ள போது மட்டக்களப்பு எண்ணெய் புகையிரதம் மாத்திரம் பகல் நேரத்தில் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்ட சந்தர்ப்பத்தில் மட்டக்களப்பு நிலையத்தின் இதற்கு முன்னர் சேவையில் ஈடுபட்டிருந்த உத்தியோகத்தர்கள் பிற்பகல் 3.30 முதல் இரவு 9.30 வரையான காலம் சேவையாற்றியுள்ள போது இணைப்புச் செய்யப்பட்டுள்ள ஓய்வுபெற்ற முகாமையாளர் ஒருவருக்கு 00.00 மணித்திலாயங்கள் 24.00 மணித்தியாலங்கள் வரை கடமைகளில் ஈடுபட்டமைக்காக 2021 ஆம் ஆண்டின் போது மாத்திரம் மேலதிக நேரப் படிகளாக உரிய | பதில் வழங்கப்பட்டிருக்க வில்லை. | மேலதிகநேரப் படிகளை செலுத்துதல் உயர் உத்தியோகத்தர் ஒருவரின் முறையான கண்காணிப்பின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கொடுப்பனவிற்கு மேலதிகமாக ரூபா 545,548 ஆன தொகை விளைவற்ற ரீதியில் செலுத்தப்பட்டிருந்தது. | | |
| (இ) | மேலதிக நேரப் படிகள் செலுத்தும் உறுதிச்சீட்டுக்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தெரிவு பரிசோதனையில் மேலதிக நேரம் சேவையில் ஈடுபட்டுள்ள சில உத்தியோகத்தர்கள் தொடர்ச்சியாக 02, 03, 04 எனுமாறு சேவையில் ஈடுபட்டு மேலதிக நேர மணித்தியாலங்களை ஈட்டியிருந்தனர். மேற்படி உயர் உத்தியோகத்தர் ஒருவரின் கண்காணிப்பின்றி இவ்வாறு தொடர்ச்சியாக சேவையில் ஈடுபடுதல் அசாதாரணமான நிலைமை என்பது அவதானிக்கப்பட்டதுடன் மேலதிக நேரத்தினை அங்கீகரிக்கும் உத்தியோகத்தர்கள் அது தொடர்பில் கவனம் செலுத்தியிருக்கவில்லை. | பதில் வழங்கப்பட்டிருக்க வில்லை. | மேலதிக நேரப் படிகள் செலுத்துதல் உயர் உத்தியோகத்தர் ஒருவரின் கண்காணிப்பின் அடிப்படையில் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

#### 3.1.1 புகையிரத பெட்டிகளை கொள்வனவு செய்தல்

இது தொடர்பில் வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகள் பின்வருமாறு.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இந்திய கடன் உதவியின் கீழ் ஐக்கிய அமெரிக்க டொலர் மில்லியன் 82.6 (ரூபா 11,564 மில்லியன்) செலவிடப்பட்டு 160 புகையிரத பெட்டிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த | M 11 என்ஜினை ஈடுபடுத்தி பிரயாணிகளின் நெரிசலைக் குறைக்கும் அதிக எண்ணிக்கையான புகையிரத பெட்டிகளை ஓட்டத்தில் ஈடுபடுத்தி காலையில் மற்றும் மாலையில் அதிக | செயற்திட்டத்தின் உத்தேச நோக்கங்கள் நிறைவேற்றப்பட வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| | போதிலும் எதிர்பார்த்த செயற்திட்ட நோக்கங்கள் எவற்றையும் அடைந்து கொள்ள முடியாதிருந்தது. | எண்ணிக்கையான பயணிகளை கொண்டு செல்வதற்கு ஈடுபடுத்தப்பட்டுள்ளமை. | |
| (ஆ) | தயாரிக்கப்பட்ட பொறியியல் மதிப்பீட்டின் பிரகாரம் ஒரு புகையிரத பெட்டியை கொண்டு வருவதற்கான செலவினம் ஐக்கிய அமெரிக்க டொலர் 0.3 மில்லியனான போதிலும் துறைமுகக் கட்டணங்கள், சுங்க கட்டணங்கள், காப்புறுதி கட்டணங்கள், போக்குவரத்து கட்டணங்கள் ஆகியவற்றை கூட்டும்போது அதன் உண்மையான செலவினம் ஐக்கிய அமெரிக்க டொலர் மில்லியன் 0.558 ஆக காணப்பட்டது. | பிரதான தலைமை இயந்திர பொறியியலாளரால் வழங்கப்பட்ட மதிப்பீட்டின் பிரகாரம் பெறுகை நடைமுறையின் ஊடாக இந்த கொள்வனவு இடம்பெற்றுள்ளமை. | பொறியியல் மதிப்பீட்டிற்கு பொருட்களை விநியோகிப்பதற்குரிய அனைத்து செலவினங்களும் உள்ளடக்கப்படல் வேண்டும். |
| (இ) | 160 புகையிரத பெட்டிகள் 10 புகையிரத பெட்டிகள் மாத்திரம் பொறுப்பேற்கப்பட்டு அதன் பிரகாரம் ஏனைய 150 புகையிரத பெட்டிகள் பரிசோதிக்கப்படாது பெற்றுக் கொள்வதற்கு பொருத்தமானவை என்பது பரிந்துரைக்கப்பட்டிருந்த மையால் பின்வருமாறு தொழில்நுட்ப அமைப்புக் குறியீடுகளிலிருந்து விலகியிருந்தமை அவதானிக்கப்பட்டது. | முதல் 10 புகையிரத பெட்டியை ஓட்டத்தில் ஈடுபடுத்திய பின்னர் இனங்காணப்பட்ட நவீனமயப்படுத்தப்படல் மற்றும் மாற்றங்கள் இரு தரப்பினரின் இணக்கப்பாட்டுடன் ஏற்படுத்தப்பட்ட தீர்மானத்தின் பின்னர் எஞ்சிய 150 புகையிரத பெட்டிகளையும் கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | குறித்த விநியோகத்தின் தொழில்நுட்ப அமைப்புக் குறியீடுகளுக்கு இணங்க வேண்டும். |
| (i) | புகையிரத பெட்டிகளின் நீளம், அகலம் மற்றும் உயரம் நியமத்தினை விட அதிகமாக அதிகரிக்கப்பட்டிருந்தன. | Conceptual Drawings இன் பிரகாரம் தயாரிக்கப்பட்டுள்ளமை மற்றும் புகையிரதத் திணைக்களத்திற்கு எதுவித நட்டமும் ஏற்படவில்லையென்பது. | - மேற்படி - |
| (ii) | பேணப்பட வேண்டி ஒட்ட வேகம் 120 $Kmh^{-1}$ ஆன போதிலும் அமைப்புக் குறிப்பீட்டின் பிரகாரம் வளைவுகளில் (Curve) | வீதியின் வளைவுகளுடனான இடங்களில் பொதுவான வேகத்தை மட்டுப்படுத்தல் தடுக்க முடியாத விடயம் என்பதால் அது புகையிரத | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | ஆகக்குறைந்த ஆரை 150 மீற்றர்கள் ஆன போதிலும் நிலையங்களில் காணப்படும் வளைவுகளின் (Curve) ஆரையானது 90 மீற்றர் ஆனமையால் புகையிரதம் வேகமாக பயணிக்கும் போது புகையிரதம் தடம்புரளுதல் மற்றும் விபத்துக்களுக்கு உள்ளாகின்றமை அவதானிக்கப்பட்டதுடன் இதனை தடுப்பதற்கு வேகக் கட்டுப்பாடுகளை விதிப்பதன் மூலம் ஏனைய உயிரினங்களுக்கும் தாக்கம் ஏற்பட்டிருந்தது. | பெட்டிகளில் உள்ள குறைபாடு அல்ல என்பது குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் வேகத்தைக் கட்டுப்படுத்துவதால் ஏற்படும் தாமதங்களை குறைப்பதற்காக வீதிகளை புதுப்பித்து குறைவான வளைவுகளைக் கொண்டு மாற்றியமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | |
| (iii) | அமைப்புக் குறிப்பீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள அளவினை விட மூன்றாம் வகுப்பின் ஆசனங்கள் 82, இரண்டாம் வகுப்பு ஆசனங்கள் 82 மற்றும் வளிச்சீராக்கப்பட்ட பெட்டிகளின் ஆசனங்கள் 70 எனுமாறு 234 ஆசனங்கள் குறைவடைந்திருந்தது. | அங்கீகரிக்கப்பட்ட Conceptual Drawings சுட்டிக் காண்பிக்கப்பட்டுள்ளவாறு சரியான அளவீடுகளின் பிரகாரம் புகையிரத பெட்டிகள் தயாரிக்கப்பட்டுள்ளமை மற்றும் அதன் மூலம் திணைக்களத்திற்கு நட்டம் ஏற்பட்டிருக்கவில்லை என்பது. | - மேற்படி - |
| (iv) | புகையிரத தலைப்பகுதி முதல் புகையிரததின் மேடை வரையிலும் காணப்பட வேண்டிய அங்கீகரிக்கப்பட்ட நேரத்தினை விட இந்த புகையிரதம் தரை வரையிலும் 400 mm அதாவது 16 அங்குலம் உயரத்தினால் அதிகரித்திருந்தது. | படிகளை உள்ளே எடுத்தமையால் பெட்டியின் அடிச்சட்டகம் பலமிழக்கின்றமையால் அதனை தாங்கக் கூடிய இயலுமை குறைவடைகின்றமை மற்றும் பயணிகளின் பாதுகாப்பிற்கு அது நேரடியாக தாக்கத்தை ஏற்படுத்தாது என்பதும் குறிப்பிடப்பட்டுள்ளது. | - மேற்படி - |
| (v) | Auto Coupler களில் காணப்பட்ட குறைபாடுகள்<br>• Lock Lifter இனை ஓட்டத்தின் போது துண்டிக்கப்பட்டமை மற்றும் அதன் அடிப்படையில் தன்னியக்க நிலுவை | தண்ணியக்க இழுவையின் திட்டத்தின் உரித்து உற்பத்தி நிறுவனத்திடம் காணப்படுவதுடன் இனங்காணப்பட்ட குறைபாடுகள் பெட்டிகளுக்காக Acceptance Certificate | - மேற்படி - |

| | | |
|---|---|---|
| (knuckle) திறக்கப்படாமை.<br>• Lock weight பகுதி அங்கீகரிக்கப்பட்ட Auto Head இன் உட்புறத்தில் உரிய அளவினை விட அதிக இடம் உள்ளமை.<br>• தன்னியக்க இழுவையின் நக்கில் (knuckle) இணைக்கப்படும் துளை அதனை விட 2mm தொடுப்பொன்று (play) காணப்பட்டமை.<br>• தண்ணியக்க இணைப்பு மூடப்பட்ட பின்னர் 5mm-8mm அளவான தேவையற்ற இடம் காணப்பட்டமை.<br>• Lock Lifter இன் மேற்பகுதி அளவில் பெரியதாக காணப்பட்டமை.<br>• Auto cupler Head மற்றும் Auto Coupler shank ஆகியவற்றின் முனைகளுக்கிடையே 10 mmக்கு அதிகமான இடம் காணப்பட்டமை. | வழங்கும் போது இந்த குறைபாடு நிவர்த்தி செய்யும் நிபந்தனைக்கு அமைய பரிந்துரைகள் வழங்கப்பட்டுள்ளமை. | |

### 3.1.2 புகையிரத பயணத் தடவைகள் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| புகையிரத திணைக்களத்தினால் 2021 ஆம் ஆண்டினுள் 84,224 புகையிரத ஓட்டங்கள் மேற்கொள்வதற்கு | பதில் வழங்கப்பட்டிருக்க வில்லை. | உத்தேச இலக்குகள் அடையப்பட வேண்டும். |

எதிர்பார்த்திருந்த போதிலும் அவ்வாண்டினுள் 69,036 தடவைகள் மாத்திரம் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டிருந்தது. இதற்கமைய 15,188 புகையிரத ஓட்டங்கள் இரத்தாகி இருந்ததுடன் இது 18 சதவீதமாகும்.

### 3.1.3 கண்டி – கெட்டம்பே இடையில் இரட்டை புகையிரத தண்டவாளமொன்றை நிர்மாணித்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| கண்டி – கெட்டம்பே இடையில் இரட்டை புகையிரத தண்டவாளமொன்றை நிர்மாணிப்பதற்காக இரட்டை புகையிரத வீதியினை நிர்மாணிப்பதற்காக ரூபா 47,618,821 பெறுமதியான தனியார் நிறுவனமொன்றுடன் உடன்படிக்கை கைச்சாத்திட்டிருந்ததுடன் அதன் நிர்மாணப் பணிகள் 2018 யூலை 30 ஆந் திகதிக்கு முன்னர் நிறைவு காலம் நீடிக்கப்பட்டமை) நிறைவு செய்யப்பட வேண்டியதாக காணப்பட்ட போதும் இதுவரையிலும் செயற்திட்டத்தின் பணிகள் நிறைவு செய்ய முடியாதிருந்தது. மேலும் 1/720 முதல் 1/830 வரை மற்றும் 1/900 முதல் 1/980 வரையிலான மொத்த நீளம் 190 மீற்றர்கள் அளவான பகுதி நிர்மாணிப்பு பணியை ஒப்பந்ததாரர் நீங்கியிருந்ததுடன் இந்தப் பகுதி திணைக்களத்தின் தலையீட்டுடன் ஒழுங்கமைப்பதற்கு இணங்கியிருந்த போதிலும் இதுவரையிலும் நிறைவு செய்யப்பட்டிருக்க வில்லை. இதன் போது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன. | பதில் வழங்கப்பட்டிருக்க வில்லை. | நிர்மாணங்களுக்காக உடன்படிக்கையின் பிரகாரம் உரிய காலத்தில் பணிகள் நிறைவு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (அ) | சரளைக் கற்கள் (Ballast) இட்டு தயாரிக்கப்பட்டிருந்த வீதி பல்வேறு செயற்பாடுகள் காரணமாக சிதைவடைந்திருந்ததுடன் நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்ட அளவிற்கு தேவையான Slippers, Rails மற்றும் ஏனைய பொருட்களுக்கு தேவையான நிதியேற்பாடு 2022 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தின் ஊடாகவும் ஒதுக்கப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்பட்டிருக்க வில்லை. | நிர்மாணிப்பதற்கு தேவையான நிதியேற்பாடுகள் ஒதுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | நியமத்திற்கமைய ABC இடுதல் 10'' ஆக காணப்பட வேண்டிய போதிலும் பௌதீக பரிசோதனையின் போது அது 9.5'', 7.25'', 9.6'' என நியமத்திலிருந்து விலகியிருந்ததுடன் Ballast இடும் போது 8'' இற்கு பதிலாக 6.75'', 6'', 7.5'' எனுமாறு நியமத்திலிருந்து விலகியிருந்தது. | பதில் வழங்கப்பட்டிருக்க வில்லை. | நியமத்திலிருந்து விலகாதிருக்க வேண்டும். |
| (இ) | நிர்மாணிப்பதற்கு புகையிரத பாதுகாக்கப்பட்ட பிரதேசத்தினுள் குடியேறியிருந்த 116 அத்துமீறிய குடியிருப்பாளர்கள் அகற்றுவதற்கு நீதிமன்றத்தின் கட்டளை வழங்கப்பட்டிருந்த போதிலும் இதுவரையிலும் 95 வீடுகளை அகற்றுவதற்கு தவறியிருந்தது. | பதில் வழங்கப்படவில்லை. | அத்துமீறிய குடியிருப்பாளர்களை அகற்றுவதற்கு நிர்வாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | லொட் இலக்கம் 01 முதல் 28 வரை மற்றும் லொட் இலக்கம் 73 முதல் 88 வரையிலும் 44 குடியிருப்பாளர்களுக்கு கண்டி பல்லேகல பிரதேசத்தில் மாற்று காணிகளை வழங்கியிருந்த போதிலும் வெல்லஸ்ஸ கிராம உத்தியோகத்தர் பிரிவிற்குட்பட்ட 17 குடியிருப்பாளர்களுக்கு | பதில் வழங்கப்படவில்லை. | குடியிருப்பாளர்களை அகற்றுவதற்கு நிர்வாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தொடர்ந்தும் புகையிரத பாதுகாக்கப்பட்ட பிரதேசத்தில் வசிக்கின்றமை. | | |
| (உ) | அகற்றும் கட்டளை கிடைத்த 35 குடியிருப்பாளர்கள் அகற்றாது தொடர்ந்தும் அங்கு வாசம் செய்கின்றமை அவதானிக்கப்பட்டது. | பதில் வழங்கப்படவில்லை. | குடியிருப்பாளர்களை அகற்றுவதற்கு நிர்வாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஊ) | இரட்டை புகையிரத பாதையின் முதலாம் கட்டத்தின் பணிகள் நிறைவு செய்யப்படாதிருந்த போது அதன் இரண்டாம் கட்டான கட்டபே முதல் சரசவி உயன வரையான வீதிக் கட்டமைப்பினை நிர்மாணிப்பதற்கான பணிகளை ஆரம்பிக்கும் கொடுப்பனவாக ரூபா 567,239,296 ஒப்பந்ததாரருக்கு செலுத்தப்பட்டிருந்தது. | பதில் வழங்கப்பட்டிருக்க வில்லை. | உரிய தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.1.4 புகையிரத பணி பகிஷ்கரிப்பினால் ஏற்பட்ட நட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்களத்தின் புகையிரத நிலைய அதிபர்களின் சில கோரிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு 2021 திசெம்பர் 24 ஆந் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்த தொழில்சார் நடவடிக்கைகளின் பிரகாரம் புகையிரத பயணிகளுக்கு புகையிரத பயணச் சீட்டுக்களை வழங்காதிருக்க எடுத்த தீர்மானம் காரணமாக 2021 திசெம்பர் 24 ஆந் திகதி முதல் 2021 திசெம்பர் 28 ஆந் திகதி வரையிலும் நாளொன்றிற்கு ரூபா 4,876,388 படி 05 நாட்களுக்கு அரசிற்கு ரூபா 24,381,943 ஆன வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | பதில் வழங்கப்பட்டிருக்க வில்லை. | தொழிற் சங்கங்களிலிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.1.5 புகையிரத பாதுகாக்கப்பட்ட காணிகளை குத்தகைக்கு வழங்குதல்**

| கணக்காய்வு அவதானிப்பு | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| L-4731 (LC-32933) இலக்கத்தின் கீழ் சட்டரீதியாக மற்றுமொரு நபருக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த கம்பளை புகையிரத நிலையத்தின் அருகில் பாதுகாக்கப்பட்ட காணி மற்றும் மற்றுமொரு பகுதி சேர்க்கப்பட்டு 02 ஏக்கர், 02 றூட், 35.3 பேர்ச் பரப்பளவான காணி கம்பளை நகர மத்திய அபிவிருத்தி செயற்திட்டத்திற்காக நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | பதில் வழங்கப்பட்டிருக்க வில்லை. | |
| (அ) | 16/1370/724/054 ஆம் இலக்கமுடைய அமைச்சரவையின் அங்கீகாரத்தின் பிரகாரம் அமைச்சரவை பிரமாணக் குறிப்பு III முன்மொழிவின் பிரகாரம் முத்தரப்பு புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றினை கைச்சாத்திடுவதற்கு முன்னர் அதற்காக சட்டமா அதிபரின் வெளிப்பாட்டினை பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை | பதில் வழங்கப்பட்டிருக்க வில்லை. | அமைச்சரவை பிரமாணக் குறிப்பின் பிரகாரம் உரிய அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | தலைமை அளவையியலாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் தீர்மானிக்கப்படும் குத்தகைக்கு அமைய இந்தக் காணி நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு வழங்கப்பட வேண்டுமென போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் பரிந்துரைத்திருந்த | பதில் வழங்கப்பட்டிருக்க வில்லை. | தலைமை அளவியலாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் குத்தகை அறவிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) | கம்பளை நகர மத்திய அபிவிருத்தி செயற்திட்டத்திற்காக 2016 செப்தெம்பர் 10 ஆந் திகதி அடிக்கல் நாட்டப்பட்டிருந்ததுடன் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் 12 ஆவது நிபந்தனையின் பிரகாரம் 2019 பெப்ரவரி 20 ஆந் திகதி வரையிலும் இந்த உடன்படிக்கை செல்லுபடியாவதாக குறிப்பிடப்பட்டிருந்தது. அதற்கமைய இதுவரையிலும் நிர்மாணங்கள் ஆரம்பிக்கப்படாதிருந்த துடன் நோக்கங்கள் நிறைவேறாமையின் அடிப்படையில் இந்த திணைக்களத்திற்கு சொந்தமான காணிகளின் உரித்தினை மீள சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்பட்டிருக்க வில்லை. | காணியின் உரித்தினை மீள சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | புகையிரத பாதுகாக்கப்பட்ட காணிகளை குத்தகைக்கு வழங்குதல் தொடர்பில் பராமரிக்கப்படும் ஆவணங்களில் கணனி மயப்படுத்தப்பட்ட குத்தகை சேகரிக்கும் நடைமுறையை செயற்திறனாக்கும் நோக்கில் மென்பொருளொன்றை உருவாக்குவதற்கு 2015 ஆம் ஆண்டில் தனியார் நிறுவனமொன்றுக்கு பணம் செலுத்தப்பட்டிருந்த போதிலும் இதுவரையிலும் அந்தப் பணி வெற்றிகரமாக மேற்கொள்வதற்கு திணைக்களம் தவறியிருந்தது. | பதில் வழங்கப்பட்டிருக்க வில்லை. | மென்பொருள் கட்டமைப்பை துரிதமாக தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.2 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 02/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 10.2 ஆம் பந்தியின் பிரகாரம் மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(2) பிரிவின் பிரகாரம் வருடாந்த நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டிய வருடாந்த செயலாற்றல் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்பட்டிருக்க வில்லை. | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் உரிய காலத்தில் அறிக்கை தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

### 3.3 வெளிநாட்டு உதவி செயற்திட்டங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

#### (அ) மஹவ – அநுராதபுரம் - ஓமந்தை புகையிரத வீதியை புனரமைத்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (i) இந்திய எக்சிம் வங்கியுடன் கைச்சாத்திடப்பட்டிருந்த கடன் உடன்படிக்கையின் நிபந்தனைகளுக்கு அமைய மகாவ - அனுராதபுரம் - ஓமந்தை வரையான புகையிரத வீதியை புனரமைப்பதற்காக Iron International Limited நிறுவனத்துடன் ஏற்படுத்தப்பட்ட இணக்கப்பாட்டின் பிரகாரம் 19.26 சதவீத கழிவிற்கு அமைய ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்ததுடன் கலந்துரையாடல் நடாத்துவதற்கு ஏனைய விலைக்கேள்வியாளர் களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்பட்டிருக்க வில்லை. | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் வழிகாட்டல்கள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | வீதிப் புனரமைப்புடன் இணைந்ததாக சமிஞ்சை கட்டமைப்பை நிறுவ வேண்டிய போதிலும் சமிஞ்சை கட்டமைப்பை நிறுவுவதற்கு உரிய வேலைத்திட்டம் மற்றும் அதற்கான செலவின மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. மேலும் அந்தப் பணி ஒப்பந்ததாரரின் மூலம் மேற்கொள்ளப்படுமா அல்லது திணைக்களத்தின் சமிஞ்சை பிரிவினால் மேற்கொள்ளப்படுமா என்பது தொடர்பில் இதுவரையிலும் இறுதித் தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்படவில்லை. | பதில் வழங்கப்பட்டிருக்க வில்லை. | சமிஞ்சை கட்டமைப்பை தாபிப்பதற்கு உரிய வேலைத்திட்டம் வீதிப் புனரமைப்புடன் இணைந்ததாக மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (iii) | வாய்க்கால் பகுதியில் புகையிரத குறுக்குப் பாதைகள் (Level Crossing) 78 இனங்காணப்பட்டிருந்த துடன் அவற்றுள் 09 தற்போது தடுப்புகளுடனான முழுமையான பாதுகாக்கப்பட்ட பாதைத் தடுப்புகளாவதுடன் 01 பெல் அன்ட் லைற், பூட்டு போடப்பட்ட இரு வீதித் தடுப்புக்கள் மற்றும் எஞ்சியவை மனிதர்களால் கட்டுப்படுத்தப்படும் வீதித் தடுப்புக்கள் என்பது அவதானிக்கப்பட்டது. வீதி நிர்மாணிக்கப்பட்டதன் பின்னர் இந்த வீதித் தடுப்புக்களுக்கு நிரந்தர வீதிப் பாதுகாப்பு வேலைத் திட்டமொன்றை நிறுவுவதற்கு திணைக்களத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்பட்டிருக்க வில்லை. | வீதி நிர்மாணிக்கப்பட்டதன் பின்னர் வீதித் தடுப்புக்களுக்கு நிரந்தர வீதிப் பாதுகாப்புத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். |
| (iv) | ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் கைச்சாத்திடப்பட்டுள்ள ஐக்கிய அமெரிக்க டொலர் 91,268,600 தொகையில் 2021 செப்தெம்பர் 30 ஆந் திகதியளவில் இந்தியாவின் Export Import வங்கியின் மூலம் விடுவிக்கப்பட்டிருந்த தொகை ஐக்கிய அமெரிக்க டொலர் | பதில் வழங்கப்பட்டிருக்க வில்லை. | வேறுபாட்டிற்கான காரணங்களை ஆராய்ந்து தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 59,117,272 ஆக காணப்பட்டதுடன் அதன் இலங்கை ரூபாவின் பெறுமதி ரூபா 10,957,502,276 ஆகும். கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்த IPC பெறுமதி ஐக்கிய அமெரிக்க டொலர் 33,327,517 ஆகும்.<br><br>எனினும், ஒப்பந்ததாரருக்கு விடுவிக்கப்பட்டு தொகை ஐக்கிய அமெரிக்க டொலர் 33,219,975 ஆகும். இதற்கமைய, இடைக் கொடுப்பனவு அறிக்கை மற்றும் இந்திய எக்சிம் வங்கியின் மூலம் பணம் விடுவிக்கப்படுவதுடன் ஐக்கிய அமெரிக்க டொலர் 107,542 அதாவது ரூபா 46,306,424 ஆன வேறுபாடொன்று காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. | | |
| (v) | 2021 ஆம் ஆண்டின் மகாவ - ஓமந்தை செயற்திட்டத்தின் பணிகளுக்காக ஒதுக்கப்பட்டிருந்த நிதியேற்பாடு இலங்கை ரூபாவில் ரூபா 3,500 மில்லியன் ஆக காணப்படுவதுமன் அவற்றுள் 2021 செப்தெம்பர் 28 ஆந் திகதியளவில் பயன்படுத்தப்பட்டிருந்த நிதியேற்பாட்டின் அளவானது ரூபா 3,260 மில்லியன் ஆகும். 2021 ஒக்தோபர் 01 ஆந் திகதி முதல் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையான செலவினங்களுக்கு மேலதிகமாக கொடுப்பனவு சான்றிதழ்கள் (IPC) 08 மற்றும் 09 இற்காக செலுத்த வேண்டியுள்ள ஐக்கிய அமெரிக்க டொலர் 6,474,926 ஆன தொகை செலுத்தப்பட்டிருக்கவில்லை | பதில் வழங்கப்பட்டிருக்க வில்லை. | செயற்திட்டத்தின் பணிகளுக்காக போதிய நிதியேற்பாடு ஒதுக்கப்பட வேண்டும். |
| (vi) | 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் பூர்த்தி செய்யப்பட வேண்டிய வேலைப்பகுதி தொடர்பில் காலச்சட்டகம் மற்றும் செயல்முன்னேற்றக் | பதில் வழங்கப்பட்டிருக்க வில்லை. | ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் III பகுதி மற்றும் IV பகுதி பணிகளை நடைமுறைப் |

| | | | |
|---|---|---|---|
| | குறிப்புக்கள் செயற்திட்ட அலுவலகத்தின் மூலம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் III பகுதியின் மற்றும் IV பகுதியின் பணிகள் நடைமுறைப் படுத்துதல் தொடர்பில் திட்டமொன்று செயற்திட்ட அலுவலகத்தின் மூலம் தயாரிக்கப்பட்டு ஒப்பந்ததாரருக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | | படுத்துதல் தொடர்பில் திட்டமொன்று செயற்திட்ட அலுவலகத்தினால் தயாரிக்கப்பட வேண்டும். |
| (vii) | செயற்திட்டத்தின் மதியுரைப் பணிகளுக்காக மத்திய பொறியியல் உசாத்துறை பணியகத்துடன் (Central Engineering Consultancy Bureu) உடன் ரூபா 464,693,900 இற்கு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்த துடன் CECB இற்கு 20 சதவீத முற்பணம் செலுத்த வேண்டும். எனினும், செலுத்தியிருந்த தொகை ரூபா 60,246,504 ஆகும். | பதில் வழங்கப்பட்டிருக்க வில்லை. | உடன்படிக்கையின் பிரகாரம் 20 சதவீதமான முற்பணத் தொகை CECB நிறுவனத்திற்கு செலுத்த வேண்டும். |
| (viii) | 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக செயற்திட்டத்தின் எதிர்பார்த்த நிதி செயல் முன்னேற்றம் 39 சதவீதமாக காணப்பட்டதுடன் பௌதீக செயல்முன்னேற்றம் 38.5 சதவீதமாகும். எனினும் அடையப்பட்டிருந்த நிதி செயல்முன்னேற்றம் 23 சதவீதம் மற்றும் பௌதீக செயல்முன்னேற்றம் 27 சதவீதம் என்பது அவதானிக்கப்பட்டது. இதற்கான காரணங்களாக போதிய வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடு மேற்கொள்ளப்படாமை மற்றும் திறைசேரியினால் நிதியேற்பாடு வழங்கப்படாமை ஆகியன சுட்டிக்காண்பிக்கப் பட்டுள்ளன. மதிப்பிடப்பட்ட நிதியேற்பாடு மற்றும் உள்ளபடியான செலவினம் தொடர்பில் கருத்தில் கொள்ளும் போது அவ்வாறான நிலைமையொன்று | பதில் வழங்கப்பட்டிருக்க வில்லை. | செயற்திட்டத்தின் உத்தேச நிதி மற்றும் பௌதீக --- அடையப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இல்லாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | | |
| **(ஆ)** | **கொழும்பு சனநெருக்கடி மிகுந்த புகையிரத செயற்திட்ட சாத்தியவளக் கற்கை** | | |
| | கொழும்பு சனநெருக்கடி மிகுந்த புகையிரத செயற்திட்டத்தின் கீழ் 20 வருட காலத்திகுள் நிறைவேற்றுவதற்கு உத்தேசித்திருந்த இலக்குகள் உள்ளடக்கப்பட்டிருந்த சாத்தியவள கற்கை மற்றும் விரிவான திட்டங்கள் 2021 ஆம் ஆண்டில் மார்ச் மாதம் நிறைவு செய்யப்பட்டு உரிய வரிசை அமைச்சின் ஊடாக இலங்கை புகையிரத திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. இந்த சாத்தியவள கற்கைக்காக ஆசிய அபிவிருத்தி வங்கிக் கடன் வசதியின் கீழ் ரூபா 1,446,952,381 ஆன தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் அந்த கடனுக்கான கடன் தவணையான ஐக்கிய அமெரிக்க டொலர் 275,000 அரையாண்டிற்கு 2022 மார்ச் 15 மற்றும் 2022 செப்தெம்பர் 15 ஆந் திகதி செலுத்த வேண்டியிருந்தது. அதனால் மேற்படி சாத்தியவள கற்கையினை நடைமுறைப்படுத்தாது விளைவற்றுக் காணப்பட்டமையால் பொருளாதாரத்திற்கு எதுவித பயன்பாடும் இல்லாதிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | பதில் வழங்கப்பட்டிருக்க வில்லை. | சாத்தியவள கற்கைகளை நடைமுறைப்படுத்தி எதிர்பார்த்த பெறுபேறுகளை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | ஆசிய அபிவிருத்தி வங்கியின் நன்கொடையின் கீழ் (உடன்படிக்கை இலக்கம் TA 9382- SRI of 29-10-2017) கிடைக்கப் பெற்ற ஐக்கிய அமெரிக்க டொலர் மில்லியன் 1.5 செலவிடப்பட்டு புகையிரத திணைக்களத்திற்காக தயாரிக்கப்பட்ட பிரதான செயற்பாட்டுத் திட்டம் (Master | பதில் வழங்கப்பட்டிருக்க வில்லை. | செயற்பாட்டுத் திட்டம் நடைமுறைப் படுத்துவதால் எதிர்பார்த்த பெறுபேறுகளை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

Plan) நடைமுறைப்படுத்தப் பட்டிருக்கவில்லை.

**3.4 பெறுகைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| எம் 6 பிளாஸ்க் லோகோவிற்காக உதிரிப்பாகங்களை கொள்வனவு செய்யும் போது பொருட்களின் பற்றாக்குறை அல்லது சேதமடைதல் தொடர்பில் பொருட்கள் துறைமுகத்திற்கு கிடைத்தல் 45 நாட்களினுள் வழங்குனருக்கு அறிவிக்கப்பட வேண்டிய போதிலும் திணைக்களத்தினால் வழங்குனருக்கு பொருட்கள் குறைவாக அனுப்பப்பட்டுள்ளமை தொடர்பில் 3 வருடங்களின் பின்னரே அறிவிக்கப்பட்டுள்ளமையால் ரூபா 12,247,936 ஆன பற்றாக்குறையான வளங்கள் அல்லது பெறுமதியை மீள செலுத்த வழங்குனர் மறுத்திருந்ததுடன் இதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள ரூபா 14,537,444 தொகைக்கு அண்மிய பணம் விளைவற்ற செலவினமாகியுள்ளது. | கணக்காய்வு ஐய வினாவின் பிரகாரம் கணக்காய்வு விடயங்கள் சரியானது என்பதை ஏற்றுக் கொள்கின்றேன். பொருட்களை விடுவிப்பதற்கு உரிய பதிவேடுகள் குறித்த பிரிவிற்கு வழங்கும் போது தாமதம் ஏற்பட்டுள்ளமையால் துறைமுகத்தில் பொருட்களை தேடிக் கண்டறியும் போதும் விடுவிக்கும் போதும் தாமதங்கள் இடம்பெற்றுள்ளது. | வழங்குனரின் விநியோக நிபந்தனையின் பிரகாரம் உரிய காலத்தினுள் குறைவாக பொருட்களை விநியோகித்தமை தொடர்பில் அறிவிக்காமையால் ஏற்பட்ட நட்டத்தை அதற்குரிய பொறுப்புக் கூற வேண்டிய உத்தியோகத்தர் களிடமிருந்து அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) வருடாந்த பொருள் மெய்மையாய்வு** | | |
| 2021 ஆம் ஆண்டின் பொருள் மெய்மையாய்வுச் சபை அறிக்கை 2022 ஆம் ஆண்டின் மார்ச் 31 ஆந் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 16 உப திணைக்களங்களின் கீழ் | பதில் வழங்கப்பட்டிருக்க வில்லை. | சுற்றறிக்கையின் அறிவுரைகள் பின்பற்றப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உள்ள 582 இடங்களுக்குரிய அறிக்கைகள் சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை. | | |
| **(ஆ)** | **குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்**<br>------------------------------------------- | | |
| | போக்குவரத்து பிரிவினால் சமர்ப்பிக்கப்பட்ட வாகனப் பட்டியலின் பிரகாரம் ஓட்ட நிலைமையில் உள்ள 03 வாகனங்கள் ஓட்ட நிலைமையில் காணப்படாத 03 வாகனங்களும் நீண்டகாலமாக 18 தொழிற்சாலைகளில் தரித்து வைக்கப்பட்டிருந்தன. | பதில் வழங்கப்பட்டிருக்க வில்லை. | வாகனங்களை பழுதுபார்ப்பதற்கு அல்லது கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| **(இ)** | **காணிகளை குத்தகைக்கு வழங்குதல்**<br>------------------------------------------- | | |
| | புகையிரதக் காணிகளை குத்தகைக்கு வழங்கும் போது உரிய முறையில் உடன்படிக்கைகளை கைச்சாத்திடாமை, அத்துமீறிய பயன்பாடு, அத்துமீறிய நிர்மாணங்கள், இடை குத்தகைக்கு வழங்குதல், உடன்படிக்கையின் நிபந்தனைகளை மீறுதல், வருமானங்களை உரிய முறையில் அறவிடாமை மற்றும் அவற்றின் உரித்து தொடர்பிலான பிரச்சினைகள் உருவாகும் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. | பதில் வழங்கப்பட்டிருக்க வில்லை. | உரிய முறையில் உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட வேண்டியதுடன் அத்துமீறிய நிர்மாணங்கள், உடன்படிக்கை நிபந்தனைகள் மீறப்படுதல் மற்றும் அத்துமீறிய பயன்பாடு தொடர்பில் உரித்தினை மீளப் பெற்றுக் கொள்வதற்கு நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| **(ஈ)** | **விளைவற்ற சொத்துக்கள்**<br>------------------------------------------- | | |
| (i) | எஸ் 8 க்ளாஸ் லோகோவிற்கு மேலதிக உதிரிப்பாகங்களை கொள்வனவு செய்யும் போது 2019 ஏப்ரல் 10 ஆந் திகதி திணைக்களத்திற்கு கிடைத்திருந்த ரூபா 16,781,002 பெறுமதியான உதிரிப்பாகங்களின் | 2021.12.24 ஆந் திகதி வரையிலும் இன்டென்டில் குறிப்பிடப்பட்டுள்ள முறைக்கமைய முதலாவது 4 உருப்படிகளும் பயன்படுத்தப்பட்டு நிறைவடைந்துள்ளதுடன் 05, 06, 08 இலக்கமுடைய உருப்படிகளினதும் ஒரு தொகுதி பயன்பாட்டிற்கு | இருப்புக்கள் சுழற்சி முறையில் பயன்படுத்தப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இருப்பு 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாது களங்சியங்களில் விளைவற்றுக் காணப்பட்டது. | எடுக்கப்பட்டுள்ளது. இலக்கம் 11 உடைய உருப்படி பயன்பாட்டிற்கு பொருத்தமற்றது என இனங்காணப்பட்டுள்ள மையால் அது தொடர்பில் உரிய முறையில் நடவடிக்கை எடுப்பதற்கு புகையிரத களஞ்சிய அதிகாரிக்கு அறிக்கையிடப்பட்டுள்ளது. | |
| (ii) | கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட 314 வாகனப் பட்டியலின் பிரகாரம் திணைக்களத்திற்குச் சொந்தமான 53 வாகனங்கள் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்படாது விளைவற்றுக் காணப்பட்டது. | பதில் வழங்கப்பட்டிருக்க வில்லை. | ஓட்டத்தில் ஈடுபடுத்தப்படாது விளைவற்றுக் காணப்படுகின்ற வாகனங்களை புதுப்பிப்பதற்கு அல்லது கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.6 நட்டம் மற்றும் இழப்பு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மாவட்ட பொறியியல் (மத்திய) உப திணைக்களத்திற்குரிய சுமார் 25 வருடங்களை விட பழமையான ரூபா 2,991,578 பெறுமதியான 04 அழிவு நட்ட சந்தர்ப்பங்கள் அறவிடுவதற்கு அல்லது பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன் அவற்றுள் 2,906,640 பெறுமதியான 02 சம்பவங்கள் இடம்பெற்ற திகதிகள் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை | நட்டம் ஏற்பட்ட திகதிகளை திட்டவட்டமாக குறிப்பிட முடியாத சந்தர்ப்பங்களில் ஆரம்ப அறிக்கையின் திகதி குறிப்பிடப்பட்டிராத போது நட்ட இழப்பு பதிவேட்டின் திகதியை உள்ளடக்க முடியாமையினால் திகதி குறிப்பிடப்பட்டிருக்கவில்லை | இவ்வாறான அழிவு நட்டங்கள் தொடர்பில் திறைசேரிக்கு அறிவித்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மாவட்ட பொறியியலாளர் (மேல்) போக்குவரத்து உத்தியோகத்தர் அலுவலகம் (கொழும்பு), பிரதான இயந்திர பொறியியலாளர் மற்றும் மாவட்ட பொறியியலாளர் (வடக்கு) அலுவலகம் ஆகிய 04 உப திணைக்களங்களின் பெறுமதி மதிப்பிடப்படாத 223 அழிவு நட்டச் சந்தர்ப்பங்கள் மதிப்பிடப்பட்டிராததுடன் அந்த சம்பவங்களிடையே 172 சம்பவங்கள் சுமார் 30 வருடங்களுக்கு மேற்பட்ட பழைமையானவை ஆகும். | 05 வருடங்களுக்கு மேல் கடந்துள்ள போதிலும் பூர்த்தி செய்வதற்கு இதுவரையிலும் நடவடிக்கை எடுத்திராத அழிவு நட்டங்கள் தொடர்பில் தாமதிக்காது நடவடிக்கை எடுக்குமாறு இந்த நட்டத்தினை நிறைவு செய்வதற்கு செயற்பட வேண்டிய விதம் தொடர்பில் செயல்நடவடிக்கைத் திட்டமொன்றினை சமரப்பிக்குமாறு திணைக்களத்தின் தலைவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | பழைமையான அழிவு நட்ட பெறுமதிகளை மதிப்பிட்டு அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | 30 வருடங்களுக்கு மேற்பட்ட பழைமையான பயன்பெறாத நடவடிக்கைகள் காரணமாக ஏற்பட்ட 07 சம்பவங்களுக்குரிய ரூபா 5,347,697 பெறுமதியான அழிவு நட்டங்களை புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்காது நீண்டகாலமாக இறுதிக் கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது. | இந்த நட்டத்தை பதிவழிப்பதற்காக நிதிப் பிரமாணம் 109 அறிக்கை சமர்ப்பிக்குமாறு மாவட்ட பொறியியலாளர் (வடக்கு) அறிவிக்கப்பட்டுள்ளது. நி.பி 109 அறிக்கை கிடைத்துள்ள நட்டங்கள் அனுமதிக்காக நிதிப் பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | இவ்வாறான அழிவு நட்டங்கள் தொடர்பில் திறைசேரிக்கு அறிவித்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | 30 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்துள்ள போதிலும் பிரதான புகையிரத கணக்காளர் அலுவலகம், வணிக அத்தியட்சகர் அலுவலகம், புகையிரத களஞ்சிய அத்தியட்சகர் அலுவலகம், பிரதான இயந்திர பொறியியலாளர், போக்குவரத்து அத்தியட்சகர் (கொழும்பு) மற்றும் தடம்புரள்தல் ஆகிய பிரிவுகளுக்குரிய நட்டங்கள் மற்றும் இழப்புச் சம்பவங்கள் 35 இற்குரிய ரூபா 91,231,001 ஆன அழிவு நட்டங்களை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 05 வருடங்களுக்கு மேற்பட்டுள்ள காலம் கடந்துள்ள போதிலும் நிறைவு செய்வதற்கு இதுவரையிலும் நடவடிக்கை எடுத்திராக அழிவு நட்டங்கள் தொடர்பில் தாமதமின்றி நடவடிக்கை எடுக்குமாறு உப திணைக்களங்களின் தலைவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.7 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ)** | **விநியோகிக்கப்படாத பொருட்களுக்கான கொடுப்பனவுகள்** | | |
| (i) | பொருட்கள் உரிய நியமத்துடனும் சரியான அளவுகளுடனும் கிடைத்தமை தொடர்பில் கொடுப்பனவு சான்றுபடுத்தும் உத்தியோகத்தரினால் சான்றுப்படுத்திய பின்னர் களஞ்சிய விநியோகத்திற்காக கொடுப்பனவு மேற்கொள்ள வேண்டிய போதிலும் விநியோகிக்கப்படாத பண்டங்களுக்காக ரூபா 90,940,453 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | நாணயக் கடிதங்களை திறக்கும் நிபந்தனைகளின் பிரகாரம் முழுமையான தொகையும் வழங்குனருக்கு செலுத்த நேர்ந்திருந்தது. எனினும் விநியோகிக்காத பொருட்கள் தொடர்பில் இனங்காணப்பட்ட சந்தர்ப்பத்தில் உரிய வழங்குனருக்கு அறிவித்து மீண்டும் வரவழைப்பதற்கு பணத்தை மீளளிப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பொறுப்புக் கூற வேண்டிய உத்தியோகத்தர்கள் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | மீளாய்வாண்டின் இறுதி தீர்க்கப்படாத நாணயக் கடிதங்களின் பெறுமதி ரூபா 616,141,592 ஆக காணப்பட்டதுடன் அவற்றுள் 19 சதவீதமான ரூபா 116,958,556 தொகை 02 முதல் 23 வருடங்களுக்கு இடைப்பட்ட பழைமையான மீதிகள் ஆகும். பணம் செலுத்தி 02 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்துள்ள இந்த மீதிகள் GRN மூலம் தீர்க்கப்படாமைக்கான காரணங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிராததுடன் ரூபா 116 மில்லியனுக்கு மேற்பட்ட இந்த கொடுப்பனவு விநியோகிக்கப்படாத பொருட்களுக்காக வழங்குனர்களுக்கு செலுத்தியுள்ள பணமா | 1998-2009 ஆண்டுகளில் காணப்படும் தீர்ப்பனவு செய்யப்படாத நாணயக் கடிதங்களின் பெறுமதி ரூபா 35,715,002.00 ஆக காணப்படுவதுடன் அது மிகவும் பழைமையான மீதி என்பதால் இதற்குரிய தகவல்களை இனங்கண்டதன் பின்னர் எதிர்காலத்தில் சரியாக சமர்ப்பிப்பதாகவும் 2010-2020 வரையிலும் தீர்ப்பனவு செய்யப்படாத பெறுமதி 2022 பெப்ரவரி மாதத்தின் உள்ளபடியான ரூபா 144,516,621.09 ஆக காணப்படுவதுடன் எதிர்காலத்தில் பொருள் பெறுவனவு எத்திரங்களை துரிதமாக பெற்று எஞ்சிய தொகையையும் இருப்பிற்கு உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | இந்த நாணயக் கடிதங்களை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | என்பது தொடர்பில் கணக்காய்வின் போது பிரச்சினைக்குரியதாக இருந்தது. | | |
| (ஆ) | பொருட்களை இறக்குமதி செய்யும் போது விடுவிப்பு பணிகள் செயற்திறனாக மேற்கொள்ளாமையின் அடிப்படையில் வருடாந்தம் பாரியத் தொகை தாமதக் கட்டணம் மற்றும் வட்டியாக செலுத்த நேர்ந்திருந்ததுடன் மீளாய்வாண்டினுள் அவ்வாறு செலுத்தப்பட்டுள்ள தொகை ரூபா 20,891,472 ஆகும். களஞ்சிய முற்பணக் கணக்கிற்குரியதாக மீளாய்வாண்டிலும் அதற்கு முன்னர் 03 வருடங்களிலும் செலுத்தப்பட்ட தாமதக் கட்டணங்கள் மற்றும் வட்டி பெறுமதி ரூபா 73,921,280 ஆகும். | இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களுக்காக கொடுப்பனவு மேற்கொள்ளும் போது ஆவணங்களை சமர்ப்பிப்பதில் ஏற்பட்ட தாமதத்தின் அடிப்படையில் வங்கியால் அறவிடப்பட்ட வட்டி பெறுமதி மற்றும் மீளாய்வாண்டின் போது நிறுவனத்தின் பொருட்களுக்காக மேற்கொள்ளப்பட்ட தாமதக் கட்டணம் மற்றும் திறைசேரியிலிருந்து கிடைக்கும் பணத்தின் அளவின் பிரகாரம் பொருட்கள் விடுவிக்கப்படுகின்றமையால் கிடைக்கும் கட்டுநிதி தாமதமாக கிடைக்கின்ற காரணத்தினாலும் கப்பல் கூட்டுத்தாபனத்திற்கு தாமதக் கட்டணங்களை செலுத்துவதை தவிர்க்க முடியாதுள்ள நிலைமை காணப்படுகின்றமை. | பொருட்களை இறக்குமதி செய்யும் போது செலுத்துவதற்கு நேர்கின்ற தாமதக் கட்டணங்கள் மற்றும் வட்டியை குறைப்பதற்கு போதிய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.8 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதில் வழங்காமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 ஆம் ஆண்டிற்கான கொடுக்கல் வாங்கல்களை பரிசோதனை செய்வதற்காக 2020 ஆகஸ்ட் 27 ஆந் திகதி முதல் வழங்கப்படும் 35 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு இதுவரையிலும் பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்பட்டிருக்க வில்லை. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.9 முகாமைத்துவ நலிவுகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிலையங்களுக்கான எரிபொருள் அளவு குறித்த மாதாந்த அறிக்கைகள் நீண்ட கால தாமதத்துடன் வழங்கப்படுவதையும், களஞ்சிய உப திணைக்களத்தினால் அந்த அறிக்கைகள் பெறுவது தொடர்பான போதுமான தகவல்களை புதுப்பிக்கவில்லை என்பதையும் அவதானிக்க முடிந்தது. மேலும், GRN தயாரிப்பதற்குத் தேவையான விலைப்பட்டியல்களின் அசல் பிரதிகளை இலங்கை பெட்ரோலியம் சட்டப்பூர்வ கூட்டுத்தாபனத்திடமிருந்து பெற்றுக்கொள்ள சரியான நடைமுறையொன்று காணப்படவில்லை. அதே நேரத்தில் SRS கிடங்கு மூலம் GRN தயாரித்தல் மற்றும் கணக்காளருக்கு GRN வழங்குதல் (விநியோகம்/கொடுப்பனவுகள்) நீண்ட தாமதத்துடன் நடந்தன. | மேலே குறிப்பிட்டுள்ள பலவீனங்களைக் குறைக்க தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | தொடர்புடைய அறிக்கைகள் முறையாகப் பெறப்பட வேண்டும் மற்றும் GRN தாமதமின்றி செயலாக்கப்பட வேண்டும். |
| (ஆ) | ஒவ்வொரு மாதமும் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்ட டீசலின் அளவானது சியாக புகையிரதத் திணைக்களத்திற்கு கிடைத்தமை தொடர்பில் சான்றுபடுத்திய பின்னர் கொடுப்பனவு செய்ய வேண்டிய போதிலும், டீசல் கிடைத்ததாக நிலையங்களிலிருந்து கிடைக்கும் அறிக்கைகள் மற்றும் GRN கிடைப்பதற்கு முன்னர் வழங்கப்பட்ட அனைத்து டீசல் இருப்புகள் புகையிரத திணைக்களத்திற்கு கிடைத்ததாக கருதி இலங்கை | GRN இனை உரிய நேரத்தில் கணக்குப் பிரிவிற்கு வழங்காத காரணத்தால் கொடுப்பனவுகளை தாமதப்படுத்தினால் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு செலுத்த வேண்டிய தொகையின் நிலுவை மீதி உயர்வடைந்தமையால் எரிபொருள் வழங்கப்படுதல் இடைநிறுத்தப்படுவதாக வாய்மொழி மூலம் குறிப்பிடப்பட்டுள்ளமையால் விற்பனை அறிக்கையினை கருத்திற்கொண்டு GRN கிடைக்கும் வரையிலும் | உரிய டீசல் இருப்பு கிடைத்த பின்னர், அது கிடைத்தது தொடர்பில் GRN ஊடாக உறுதிப்படுத்தியதன் பின்னர் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு சமர்ப்பிக்கப்படும் மாதாந்த விற்பனை அறிக்கையின் குறிப்பிடப்பட்டுள்ள தொகையை செலுத்தியமையால், புகையிரத திணைக்களத்திற்கு கிடைக்கவில்லை என குறிப்பிடப்பட்ட 131,850 லீட்டர் டீசல் தொடர்பில் ரூபா 13,506,715 செலுத்தப்பட்டிருந்தது. | கொடுப்பனவுகளை பரிந்துரைக்கு சமர்ப்பிக்க நேர்ந்துள்ளது. எவ்வாறான போதிலும், கணக்காய்வுக்கு உட்படுத்தப்பட்ட 52,740 லீட்டர் டீசலுக்குரிய ரூபா 5,402,686.00 பெறுமதியான இரு பட்டியல்கள் 2020 பெப்ரவரி மாத விற்பனை அறிக்கையிலிருந்து கழிக்கப்பட்டுள்ளது. மேலும் 52,740 லீட்டர் டீசலுக்குரிய ரூபா 5,402,686.00 பெறுமதியான இரு பட்டியல்கள் திருப்பி அனுப்பப்பட்டுள்ளதாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது. அதற்கு மேலதிகமாக 26,370 டீசலுக்குரிய ரூபா 2,701,343.00 பெறுமதியான பட்டியலொன்று பொது திறைசேரியின் திணைக்களத்தின் Transfer Sheet – 2020- 06 மூலம் ஈடு செய்யப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. | |
| (இ) | நிலையங்களின் ஊடாக BGT மூலம் எரிபொருள் பெற்றுக்கொள்ளும் போது பற்றுச்சீட்டின் பெறுமதியை விட குறைந்த அளவில் எரிபொருள் கிடைத்திருந்த போதிலும், அதனை கருத்திற்கொள்ளாது பற்றுச்சீட்டுகளின் அளவிற்கு பொருள் பெறுவனவு சீட்டுகள் வழங்கப்படுதல் மற்றும் கொடுப்பனவு மேற்கொள்ளல் நிறுவனத்தின் நடைமுறையான காரணத்தால் 05 நிலையங்களுக்குரிய 2021 ஆம் ஆண்டின் போது கிடைக்காத 10,284 லீட்டர் எரிபொருளுக்காக ரூபா 1,068,465 தொகையும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது. | குறிப்பிடப்பட்டுள்ள நலிவுகளை குறைத்துக்கொள்ள உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு செலுத்தப்பட்டுள்ள ரூபா 1,068,465.00 ஆன தொகை எதிர்கால வழங்கல்களிலிருந்து ஈடுசெய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளது. | நிலையங்களுக்காக கிடைத்த எரிபொருள் அளவிற்கு மாத்திரம் கொடுப்பனவு மேற்கொள்ள வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஈ) 04 நிலையங்களுக்குரிய நிலவும் டீசல் இருப்பு பதிவேடுகளின் பிரகாரம் மீதி மற்றும் மாதாந்த பெறுவனவுகள், விநியோகங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் நிலவும் மீதிகள் ஆகியவற்றுக்கிடையே 450 லீட்டர் முதல் 12,568 லீட்டர்களுக்கு இடைப்பட்ட வீச்சில் வேறுபாடு அவதானிக்கப்பட்டதுடன், இந்த வேறுபாட்டுக்காக காரணங்களை குறிப்பிடுவதற்கு பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினர் தவறியிருந்தனர். | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | மாற்றங்களுக்குரிய திட்டவட்டமான காரணங்களை கண்டறிந்து திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**4. மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) திணைக்களத்தினால் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்ட பதவியணி தரவுகளின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான ஒட்டுமொத்த அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் வெற்றிடங்களின் எண்ணிக்கை 9,310 ஆகும். அது அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் 45 சதவீத அளவாகும். திணைக்களத்தினால் அந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்காது 359 பதவியணியினர் அமைய மற்றும் ஒப்பந்த அடிப்படையில் இணைத்துக் கொள்ளப்பட்டிருந்தனர். | இந்த திணைக்களத்தில் நிலவும் பதவிகளில் ஏற்படும் வெற்றிடங்களை துரிதமாக நிரப்புதல் தொடர்பில் இதுவரையிலும் பணிகள் இடம்பெற்றவாறு உள்ளமை. இதுவரையிலும் பதவிகளில் நிலவும் வெற்றிடங்களின் நிலைமையை குறைப்பதற்கு அரச சேவைகள் ஆணைக்குழுவின் தலைவரின் அங்கீகாரத்தின் அடிப்படையில் அத்தியாவசியமான பதவிகளுக்கு ஒப்பந்த அடிப்படையில் 92 பதவிகளுக்காக ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஒருங்கிணைந்த சேவைகளுக்குரிய வெற்றிடங்களுக்கு தற்போது 84 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் இந்த திணைக்களத்திற்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ளமையும் மேலும் தெரிவித்துக் கொள்கின்றேன். மேலும் ஏனைய பதவிகளுக்கு உள்ளக பதவியுயர்வு வழங்கும் நடவடிக்கை தற்போது இடம்பெறுவதுடன் அந்த பணிகளை துரிதப்படுத்தும் நடவடிக்கையாக உப திணைக்களங்களின் | பதவியணி வெற்றிடங்களை கூடிய விரைவில் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | தலைவர்களுக்கு குறித்த பதவியுயர்வு பெற்றுக் கொடுக்கும் அதிகாரங்கள் பன்முகப்படுத்தப்பட்டுள்ளது. | |
| (ஆ) | திணைக்களத்தின் பதவியணியின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்காது திணைக்களத்தின் சேவையிலிருந்து ஓய்வு பெற்றுச் சென்ற 145 உத்தியோகத்தர்கள் (புகையிரத ஓட்டுனர்கள், கண்காணிப்பாளர், மேற்பார்வை முகாமையாளர் மற்றும் புகையிரத பாதுகாப்பு உத்தியோகத்தர் ஆகிய பதவிகள் நீங்கலாக) ஒப்பந்த அடிப்படையில் மீண்டும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். | தொழில்நுட்பத் தொகுதி பதவிகளை நிரப்புவதற்காக வெளிவாரி ஆட்சேர்ப்புக்களுக்கு உரிய அங்கீகாரம் நிதி அமைச்சிடம் கோரப்பட்டுள்ளதுடன் மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேர்ப்புக்களுக்காகவும் நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளது. | வெற்றிடமான பதவிகளுக்காக புதிய ஆட்சேர்ப்புக்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | இலங்கை ஜேர்மன் புகையிரத தொழில்நுட்ப பயிற்சி நிலையத்திற்காக மதியுரையாளர் பதவிகள் 17 அங்கீகரிக்கப்பட்டுள்ள போதிலும் அப்பதவிகளுக்குரிய ஆட்சேர்ப்புக்கள் இடம்பெற்றிருக்கவில்லை. | இலங்கை ஜேர்மன் புகையிரத தொழில்நுட்ப பயிற்சி நிலையத்தின் 17 மதியுரை பணிகளுக்காக தகைமை பெற்றுள்ளது 10 பேர் மாத்திரமே என்பதால் அவர்களுக்கான நேர்முகப் பரீட்சைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. எஞ்சிய 07 வெற்றிடங்களை நிரப்புவதற்கு உரிய தகைமையுடையோர் காணப்படவில்லை.<br><br>அரச கொள்கையின் பிரகாரம் அனைத்து ஆட்சேர்ப்புக்களையும் இடைநிறுத்துமாறு அறிவிக்கப்பட்டுள்ளமையால் வெற்றிடங்களை நிரப்புவதில் தாமதங்கள் ஏற்பட்டுள்ளன. தொழில்நுட் சேவை தொகுதி பதவிகளுக்காக அத்தியாவசியமான ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ள வேண்டியமையால் அதற்காக நிதியமைச்சின் அங்கீகாரம் கோரப்பட்டுள்ளமை தொடர்பில் தெரிவித்துக் கொள்கின்றேன். | மதியுரையாளர் பதவிக்காக துரிதமாக ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |